363
25

உ

ஆவுடையார் கோவிலென வழங்கும்

திருப்பெருந்துறை விளக்கம்

(ஸ்தல புராணம் உள்ளது)

OFFICE OF THE REGISTRAR OF
15 JAN 1925

BY

V. VENKATESWARA IYER,
Pleader, Patukota.

d] [Price As. 8.

1925.

O23 : 38 · 21193JB
N25 ·
170063.

224 S33
692

உ

ஆவடையார் கோவிலென வழங்கும்

திருப்பெருந்துறை விளக்கம்

(ஸ்தல புராணம் உள்ளது).

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
No.
15 JAN 1925

BY

V. VENKATESWARA IYER,

Pleader, Patukota.

All Rights Reserved] [Price As. 8.

1925.

Q23:38121193
N25

170063
சென்னை-600 008.

Printed at the
"Sri Nadiamman" Press,
Patukota.

170063

FOREWORD

This book, as its title indicates, is intended to serve as a guide to the sacred shrine of Avadayarkoil a village eight miles from the Arantangi Railway station. That this village is identical with the Thirupperunthurai mentioned in works of Tamil literature, where the great saint Manickavachakar received his initiation from Sri Athmanathaswami under the famous Kuruntha tree, has been well established by the learned author, in the first chapter of this work.

Every year, in the months of June and December, the magnificent temple of Sri Athmanathaswami, in this village, attracts huge crowds of devoted pilgrims. The massive grandeur of the structure of the temple, the gigantic figures chiselled neatly in stone and other works of art excite the admiration of any visitor, more so of a devotee.

To the eager visitor, anxious to learn about the structural, archaeological and mythological importance of the temple, there are not many books on the subject. There are some works in Sanskrit, and others in Tamil verse. A work dealing with the temple and its importance in easy, readable prose has long been a

want, and this book therefore supplies the same, and the author has to be congratulated upon his happy idea of this useful publication. The book deals exhaustively with all the subjects concerning the temple, from every point of view, which one might desire to know. The matter and manner leave nothing to be desired and it is hoped that the author will meet with ample encouragement which he richly deserves.

Pattukkottai,
31-12-1924

T. S. Balakrishna Deve.
Sub-Registrar.

மேற்கண்ட இங்கிலீஷ் நூன்முகம் மிக்க அன்போடு எழுதிய பட்டுக்கோட்டை ஸப்ரிஜிஸ்டரார் மகா-ள-ஸ்ரீ T. S. பாலகிருஷ்ண தவே B. A. அவர்களுக்கு நான் என் வந்தனத்தைச்செலுத்தி நன்றி பாராட்டக்கடமைப் பட்டுள்ளேன்.

நூலாசிரியன்.

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
1. நாட்டின் விவரம் ...	3
2. திருப்பெருந்துறை மகிமை ...	8
வனம	8
க்ஷேத்திரம்	8
புரம்	9
தீர்த்தம்	10
மூர்த்தி	24
தொண்டர்கள்	35
புரூரவன் அகஸ்தியர் வந்த வரலாறு	39
ஆத்மநாதர் கீழ்நீர் காட்டியது ...	40
ஆத்மநாதர் உபாத்தியாயராக வந்தது	44
வாதவூரடிகள் திருப்பெருந்துறை வந்து உபதேசம் பெறல் ...	45
நரிபரியாக்கிய திருவிளையாடல் ...	47
சுந்தரமூர்த்தி பிட்டுக்கு மண்சுமத்தலும் வாதவூரடிகள் மந்திரி வேலையை விடுதலும்	48
மாணிக்கவாசகர் தில்லையில் ஐக்கியமானது	49
குருந்தமூல மாணிக்கவாசகர் ஸ்தாபனங்கள்	50
3. ஆலயம்	52
4. தேவஸ்தான ஐவேஜிவிவரம் ...	80
5. தேவஸ்தான பரிபாலனம்	85

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
No. 15 JAN 1925

OFFICE OF THE REGISTRAR
No.
15 JAN 1925

முகவுரை.

இத்திருப்பெருந்துறையைப் பற்றிய ஸ்தல புராணம் வடமொழியிலுள்ளது இதுகாறும் அச்சிடப்படவில்லை. தமிழில், மகான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களால், பாடப்பட்டது அச்சிடப்பட்டிருந்தாலும் யாவரும் தெரிந்துகொள்ளக்கூடியவிதம் எளிய தமிழ் நடையில் வழிகாட்டியாகவாவது ஒன்று வேண்டுமென்று பலரும் என்னிடம சொன்னதை நினைந்து என் சிற்றறிவிற்கு எட்டிய மட்டில் எழுதப்புகுந்து எழுதியது. இத்தலம் முந்நூறு பிராமணர்களுடைய பரம்பரையைச் சேர்ந்தவரும் ஸம்ஸ்கிருத வித்வானுமாயிருந்து காலஞ்சென்ற ஆத்மநாத நம்பியார் அவர்கள் என்னிடம் அன்போடு சொல்லிய அரியவிஷயங்களும் இதில் அடங்கியுள்ளன.

இப்புத்தகம் வேண்டுவோர் ஆவடையார் கோவில் மகா-ள-ள-ஸ்ரீ S. மலையப்பையர் அவர்களிடம விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பதிப்பிலுள்ள பிழைகளை பெரியோர் பொறுத்தருளக்கோருகிற,

பட்டுக்கோட்டை
22—11—1924.

வே வெங்கடேசுவரய்யர்,
வக்கீல்.

உ

ஸ்ரீ சேர்க்கை விநாயகர் துணை.

திருப்பெருந்துறை விளக்கம்

1. நாட்டின் விவரம்.

நம்மிந்தியாவின் தென்பாகத்தில் தமிழ் நாடு இருக்கிறது. இத்தமிழ் நாட்டிற்கு

"குண கடல் குமரி குடகம் வேங்கடம்"

என நான்கு எல்லைகளும் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வெல்லைகளுக்குள்பட்ட பாகத்தை தமிழ்நாட்டு வேந்தர் மூவர்களான சேர சோழ பாண்டியர்களால் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன் முதல் ஆளப்பட்டு வந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

இம்மன்னர்கள் மூவர்களுடைய நாடுகளின் தனித்தனி எல்லைகளையும் விஸ்தீரணத்தையும் அடியிற் கண்ட பாடல்களறிவிக்கின்றன.

"வடக்குத்தலம் பழனி வாழ் கிழக்குச்செங்கோடு
குடதிசைக்குக்கோழிக்கூடாகும்—கடற்கரையி
ஞேரமது தெற்காகு மோரெண்பதிங்காதஞ்
சேர நாடெல்லைகையெனச் செப்பு".

எனவும்

"கடல் கிழக்கு தெற்கு கரை பொரு வெள்ளாறு
குடதிசைக்குக் கோட்டைக் கரையாம்-வடதிசை
யேனட்டுப்பெண்ணையிருபத்து நாற்காதம் [க்கு
சோழ நாட்டெல்லைகையெனச் சொல்".

எனவும்

"வெள்ளாற்றின் தெற்குமேற்குப் பெருவெளியா
தெள்ளாம்புனற் கன்னிதெற்காகும்-உள்ளான [ம்
ஆய்ந்த கடற் கிழக்கன்பத்தறு காதம்
பாண்டி நாட்டெல்லைப்பதி".

எனவும் ஔவையாலும்

"வெள்ளாற்றின் தெற்கு வெள்குமரிக்கேவடக்கு
தெள்ளு கடலின் மேற்கு தேவர்தொழும்-உள்ள
வன்னுசி பேரூதின்கிழக்கு மாரனெல்லை [மகிழ்
யன்பத்தறு காதமாம்".

என வேப்பத்தூராராலும் பாடப்பட்டிருக்கின்றன. இம்மூவேந்தர்களும் தங்கள் தங்கள் இராஜ்யத்தை பல உட்பிரிவுகளாகப் பிரித்து அவை

களைப் பல நாடுகள் அதாவது புனல் நாடு, பன்றி நாடு, கோனாடு, கான நாடு, இரும்பா நாடு எனப் போன்ற பல் அடங்கினவையாகச் செய்திருந்தார்கள். பிறகு இந்நாடுகளைப் பல கூறுகளாக்கி அவைகளுக்கு கூற்றங்களெனப் பெயரிட்டிருந்தார்கள்.

மேற்கூறிய கான நாட்டின் தென்பாகம் பலகாலம் பாண்டி மன்னர்களாலாளப்பட்டு வந்திருக்கிறது. சோமனென்னும் உக்கிரபாண்டியன் தன் கான நாட்டை ஏழு கூற்றங்களாகப் பிரித்து அவைகளுக்கு

"வெத்திவாழ்கின்ற திருமிழலைக் கூற்ற மிகுந்த
[முத்தூர் கூற்றம்
பத்தியான அரும்பூர் கூற்றம் பாசமான திருக்
[கானைக்கூற்றம்
முத்தமிழ்சேர் தொகுவூர் கூற்றம் முதன்மை
[யான கொடுமுளூர் கூற்றம்
எத்திசையான இளையான் குடிக்கூற்றம்."
எனப்பெயரிட்டிருப்பதாகத் தெரிகிறது.

மேற்கூறிய பாட்டில் சொல்லிய மிழலைக் கூற்றமானது கடற்கரையைச் சார்ந்ததென்வும் அம்மிழலை நாட்டின் ஓர் பாகத்தில் காராள வேளாளர் வசித்து வருகிறார்களென்வும் இக்காராள வேளாளர் நிலத்திற்கு,

"கேளுநம் புகழிரும்பாபுரிமேலெல்லை கிழெல்லை நீர்
நீளுங்கடலங்தப்பாம்பாறுதெற்கெல்லைநேர்வடபா
லாளுநம்புலியெல்லை தானம்புலிநதியாய் விளங்கும்
வேளுநம்புகழெழிற் காராளர் வாழுமிழலையிலே"

என்று மிழலைச் சதகமென்னும் நூலில் எல்லை சொல்லியிருக்கிறது. ஆகையால் மேலே சொல்லிய பாட்டினுல் புதுக்கோட்டை ஸமஸ்தானம் இரும்பா நாட்டிற்கு கிழக்கிலும், வங்காளக்குடாக்கடலுக்கு மேற்கிலும், பாம்பாத்துக்கு வடக்கிலும் பட்டுக்கோட்டைத் தாலூகா சுலக்ஷணம்பாள் சத்திரத்துக்கு அருகிலுள்ள அம்புலியாற்றிற்கு தெற்கிலுமுள்ள இடம் காராள வேளாளர் நாடெனவும் அது மிழலை நாட்டின் பாகமெனவும் நன்கு விளங்குகிறது. இப்பாகத்தில் இக்காலத்திலும் ஆளுடையார் கோயிலுக்கு கிழக்குள்ள பெருமருதூர் நெல்வேலி பானூர் முதலிய பல வூர்களிலும் காராள வேளாளர்களிருக்கிருர்கள். சிவயோகாம்பிகை திருப்பொன்னூசல் என்ற புத்தகத்தில் "அரந்தாங்கி சூழ் நாடாவமை மிழலை நாடு" என்றும் "தெள்ளு நீர் வெள்ளாறு பாய், திருமிழலை நாட்டுப்பெருந்துறையெனப்படுஞ் சிவபுரிக்கு..." என்று சிவயோகாம்பிகை பிள்ளைத் தமிழிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு நூல்களும் பழமையான நூல்களாகத் தெரிகிறது. ஸ்ரீ ஆத்மநாதக்கடவுள் நரியைப் பரியாக்கியதை "மிழலை நரியெல்லாமழைத்துத் தெருட்டி விளையாட நனி விளங்

கந்தழைத்த தலத்தை நரிக்குடி யென்றின்னும் சொல்வர்" என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதாலும் அறிகிறோம் மேற்சொல்லிய அரந்தாங்கி ஆவுடையார் கோயிலுக்கு 8 மைல் மேற்கிலும் நரிக்குடியானது ஆவுடையார் கோயிலுக்கு அதிக சமீபத்திலுமிருக்கின்றன.

இம்மிழலைக்கூற்றம் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு அப்பிரிவுகளுள் ஒன்றான நடுவிற் கூற்றததுள் நமது ஆவுடையார் கோயிலென வழங்கும் திருப்பெருந்துறை என்ற திவ்விய ஸ்தலம் திகழ்கின்றது. இவ்வூரின் ஆலயக்கல்வெட்டுகளில் பலவிடத்தும் "மிழலைக்கூற்றதது நடுவிற் கூற்றம், தனியூர், திருப்பெருந்துறையான்பவித்ரமாணிக்கச்சதுர்வேதமங்கலம்..." என்ற எழுத்துக்களைக் காணலாம். இக்கல்வெட்டுகளெல்லாம் மிக்கப் பழமையானவைகளே. புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலுள்ள திருவரங்குளம் என்னும் க்ஷேத்திரமும் அரிமளத்திற்கு ஸமீபத்திலுள்ள ஷை ஸமஸ்தானம் பழங்கரை யென்ற ஸ்தலமும் ஒரு காவத தூரத்துள்ளன. இப்பழங்கரைக்கு ஓர்காவததூரத்தில் இத்திருப்பெருந்துறை அரந்தாங்கித் தாலூகாவில் இருக்கிறது. இதைக் காட்டிய, தொன்றுதொட்டு கர்ணபரம்பரையாய் வழங்கும் "குளத்துக்குங்கரைக்கு மோர் காதம், கரைக்கும் துறைக்கு மோர் காதம்" என்ற பழமொழி கவனிக்கத்தக்கதே.

திருப்பெருந்துறை மிழலை நாட்டிலுள்ள க்ஷேத்திர மென்பதைக் காட்ட உள்ள ஆதாரங்கள் அநேகம். அவற்றையெல்லாம் இங்கு எழுதுவதென்றால் மிகப் பெருகும்.

---

2 திருப்பெருந்துறை மகிமை

வடக்கூர் தெற்கூரென இருகூறாய் ஆவுடையார் கோவிலென வழங்கும் திருப்பெருந்துறை ஸ்தலமானது வனம், க்ஷேத்திரம், புரம், தீர்த்தம் மூர்த்தி தொண்டர்கள் ஆகிய இந்த ஆறு சிறப்புக்களும் கூடியதெனச் சொல்லப்படுகிறது.

வனம் மூன்று பெயர்களுடன் விளங்கும் குந்த அல்லது குருந்த விருக்ஷம் திகழ்வதால் குந்தவன மென்றும, சிவயோகம் சித்திப்பதால் சிவயோகவன மென்றும் பல விருக்ஷங்கள் செடி கொடிகள் இடைவெளியின்றி நெருங்கிப் பிரகாசிப்பதால் சன்னவன மென்று பிரும்மதேவர் பெயரிட்டிருப்பதாகச் சொல்வதால்ச்சன்னவன மென்றும் பெயர்

க்ஷேத்திரப் பெயர் மூன்று. அவை மிக்க பரிசுத்தமான பெரியோர்கள் தங்குமிடமாதலால் பவித்ர மாணிக்க க்ஷேத்திர மெனவும் அறுபத்தி அறுகோடி தீர்த்தங்களையும் அங்கு ஈசுவரன் வரவழைத்துக் காட்டிய இடமாதலால் பிரகத் தீர்த்த க்ஷேத்திர மெனவும் ஆத்மநாதக் கடவுள்

அந்தணர் வடிவங்கொண்டு பிராமணர்கள் நிலங்களை மீட்டுத்தந்தமை பற்றியும், நிற்குணமாகிய பரபிரும்மமானது சகுணத்தையடைந்து இந்த க்ஷேத்திரத்தில் அடியார்களுக்கு அடிக்கடி காக்ஷியளிப்பதாலும் சிவக்ஷேத்திர மெனவும் சொல்லப்படும்.

புரம் நான்காகும். மகா கைலாயத்தில் வசிக்கின்ற பரம்பொருள் அந்த மகா கைலாஸத்துக்கும் மூலகாரணமாகிய ஆதி கைலாஸமென்கிற திருப்பெருந்துறையில் ஆத்மநாதரென்ற நாமத்தோடு தன் கலைகளை ஆயிரத்தெட்டு சிவாலயங்களிலும் நூற்றியெட்டு விஷ்ணு ஆலயங்களிலும் கங்கை முதலிய பல தீரங்களிலும் பரவச்செய்து குருந்த விருக்ஷமூலத்தில் விளங்காநின்ற யோகபீடமான பிரும்மானந்த மயமான பிரும்ம வஸ்து விளங்குவதால் ஆதி கைலாஸபுரம் என்றும், குருந்தவனத்தில் பிரும்மா ஆத்மநாதக் கடவுளிடமிருந்து காயத்திரியை உபதேசம் செய்துகொண்டு வேதார்த்த விசாரணை செய்து தவம் செய்யுங்காலையில் நான்கு வேதங்களும் உருவங்களோடு எழுந்தருளினமையால் சதுர்வேத புரம் என்றும் பிரளயத்திலுமழியாமல் சிவதேஜஸ் மற்ற க்ஷேத்திரங்களிலும் பிரகாசிப்பதால் சிவபுரம் என்றும், அக்ஞானிகளுக்கு அறியப்படாதவராய் மாயா பிம்பத்தோடு சிவனிங்கு இருத்தலால் மாயாபுரம் என்றும் சொல்லப்படும்.

தீர்த்தம் இந்த க்ஷேத்திரத்தில் அறுபத்தி அறுகோடி தீர்த்தங்களும் வந்தவிடமென்றாலும் முக்கியமாயுள்ளவை அக்கினி தீர்த்தம் ஆத்ம நாதரின் நேத்திர அக்கினிப் பொறியாலுண்டாக்கப்பட்டது. இதையே மாணிக்கவாசகர் திருத்தமாம் பொய்கையெனச் சொல்வார். ஆத்ம நாதரின் ஆலயத்துள் 3 வது மேலப்பிராகாரத்தில் காணப்படும். இதற்குள் கீழ் பக்கமாய் ஓர் சதுரக்கிணறு இருக்கிறது, இத்தீர்த்தத்துள் இயந்திரத்தகடுகளும் பாணங்களும் சாளிக்கிராமங்களும் கிடக்கின்றன. இதில் பின்னப்பட்ட மாணிக்கவாசகர் சிலையுமிருக்கிறது. இவ்வக்கினி தீர்த்தத்துக்கு எதிர் மதிள்களில் கிணற்றின் இருப்பிடத்தைக் காட்டக்கூடிய அடையாளங்கள் கீறப்பட்டிருக்கின்றன. இவ்வக்கினி தீர்த்தத்தை சக்தி தீர்த்தமெனவும் சொல்வார்.

ஆத்மகூபம் அம்பிகை ஈசுவரனை அபிஷேகம் செய்வதற்கு உண்டாக்கிய தீர்த்தமெனச் சொல்லப்படும். இத்தீர்த்தம் முதல் பிராகாரம் அதாவது உள் பிராகாரம் ஸ்ரீ நடராஜர் சன்னிதிக்கு முன்னும் குருந்த மூலருக்கு கிழக்கிலும் கூபம் அதாவது கிணறு ரூபமாய் விளங்குவது, இதை சிவதீர்த்தமென்றும சொல்லப்படும்.

கீழ் நீர்காட்டி அந்தணர் வடிவங்கொண்டு ஸ்ரீ ஆத்மநாதர் வடக்கூர் கைலாஸநாதர் ஆலயத்திற்கு முன் அதாவது கிழக்கு திக்கில் பாண்டியன்

சபையோர்களுக்கு கீழ் நீர் காட்டியவிடத்தை கீழ் நீர்காட்டி என்று சொல்லப்படும்.

இம்மூன்று விசேஷ தீர்த்தங்களோடு கூட முக்கியமாய் நவதீர்த்தங்கள அதாவது ஒன்பது தீர்த்தங்களைச் சிறப்பாய்க் கூறுவது வழக்கம். அவை அடியில் வருமாறு,

1. வேததீர்த்தம் இதையே பிர்ம்ம தீர்த்தமென்றும் சொல்லுவார்கள் இது ஆத்மநாதர் ஆலயத்திற்கு மேற்குதிக்கிலுள்ளது. இதற்கு தற்காலம் வழங்கும் பெயர் குயவன் குண்டு. இதற்கும் மேற்கிலுள்ள முதலியப்பன் ஸன்னிதி என்ற சிறுகுளத்தைச் சிலர் வேத தீர்த்தமெனச் சொல்வார். வேத தீர்த்தம் பிர்ம்மாவினுல் உற்பத்தி செய்யப்பட்டதாகப் புராணம் கூறும்.

2. நாராயண தீர்த்தம் இது வடக்கூரில் ஆதிகேசவப்பெருமாள் ஆலயத்திற்கு தெற்கில் ஸ்ரீ ஆத்மநாதக் கடவுள் உபாத்தியாயராக எழுந்தருளி பிராமணப் பிள்ளைகளுக்கு வேத அத்தியயனம் முதலிய சொல்லிவைத்த இடமாகிய பள்ளிக்கூடப்பிள்ளையார் ஆலயம் முதலிய இடங்களுக்கு எதிரில் அதாவது ஆவுடையார் கோவிலிலிருந்து காலகம்போகும் ரோட்டுக்கு மேற்குப் பக்கத்திலுள்ளது. இந்த் தீர்த்தம் ஸ்ரீ ஆத்மநாதக்கடவுளை நினைத்துத் தவம் புரிந்து உபதேசம்பெற்ற ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாளால் ஆக்கல்

ட்ட தீர்த்தமாதலின் நாராயண தீர்த்மெனச் சொல்லப்படும்.

மணிமுக்தாநதி தீரத்தில் கேசவனென்ற பெயருள்ள கோமுட்டி செட்டி ஒருவன் ஆதி நாளிலிருந்ததாயும், அவன் வியாபாரி என்றும் வியாபாரத்தில் கள்ளத்தராசு அளவு முதலிய வைகளைக்கொண்டு பலர்களையும் ஏமாற்றிப் பொருள் ஸம்பாதித்து வரும் நாளில் ஒரு திருட்டுப் பாத்திரத்தை காவேரித்தீரம் மார்த்தாண்டபுரம் என்னும் கிராமத்நிய பூதேச சாஸ்திரியள் என்ற ஒருவரிடம் விற்க அதற்கு அவர் இறயத்தொகையைக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டதாயும் இருவர்களும் அவரவர்கள் பாபங்களுக்குத் தக்கபடி முறையே நாயாகவும் பன்றியாகவும் ஜனித்து பல விடங்களிலும் ஒன்றையொன்று துரத்தி ஓடிக்கடைசியாய் சூந்தவனமடைந்து இந்த நாராயண தீர்த்தத்துக்குள் இரண்டும் விழுந்து சண்டைபோட்டு இறக்க இத்தலத்துள்ள இந்த தீர்த்தத்தில் மூழ்கினமையாலேயே இருவர்களும் திவ்யசரீரமடைந்து பாபம் நீங்கி முக்தியடைந்தார்களெனக் கதை.

3. காலாக்னி ருத்திர தீர்த்தம். ஸ்ரீ ஆத்மநாதக்கடவுளால் உபதேசிக்கப்பெற்ற உருத்திரரால் உண்டாக்கப்பட்டது எனச் சொல்வார்கள். சிவபிரானைப் பூசனைபுரிய ஏற்படுத்தியதடாகமானதால் சிவகங்கையெனவும் சொல்லப்படும்.

காலாக்னி ருத்திரர் இதன் தென்கரையில் மகிழ மரத்தடியில் ஆத்மநாதக்கடவுளை வினைந்து தவஞ்செய்ய உடனே அங்கு அக்கடவுளே இலிங்கமாய்த் தோன்றினர். அவரே இப்பொழுது இருக்கும் கைலாஸ நாதர். ஸ்தலவிருக்ஷம் மகிழமரம்.

ஸௌராஷ்டிர தேசமாகிய காளிந்தி தீரத்தில் நற்குணமுள்ள விருபாக்ஷ பிக்ஷுகனென்ற ஓர் சூத்திரன் வில்வாரண்ய க்ஷேத்திரமடைந்து லக்ஷ்மி ஸரஸில் ஸ்நானம் செய்து காருண்யவதீ ஸமேதரான வில்வநாதரை தரிசித்து அவ்வாலயத்தில் உழவாரப் பணிவிடைசெய்து வருநாளில் தான் யாசகஞ்செய்து சேர்த்த தனத்தைக்கொண்டு ஈசனுக்கும் அம்மைக்கும் அபிஷேகம் செய்து வந்தான். பிறகு இவனுக்கு விருத்தாப்பியம் வந்தமையால் அவன் பிக்ஷை வாங்கிச் சாப்பிடமுடியாமற் போனதையிட்டு அபிஷேகத்துக்கு வைத்திருந்த பொருளைக்கொண்டு தன் சாப்பாடு நடத்தி வந்த பாபத்தால் மறு ஜன்மம் சோளதேசத்தில் சுகபுரமென்ற கிராமத்தில் பெண் நாயாக ஜனித்தும் பிறகு சண்டாள ஜன்மமெடுத்தும் கடைசியாய் இக் குந்தவன க்ஷேத்திரமடைந்து இத்தடாகத்தை ஸ்பரிசிக்கநேர்ந்த அளவில் சண்டாள சரீரம் நீங்கி முக்தியடைந்ததாகச் சொல்லப்படுகிறது. இத்தீர்த்தம் வடக்கூரில் கைலாஸநாதர் ஆலயத்துக்கு வடக்கிலுள்ளது.

4. தேவ தீர்த்தம் இது கருநெல்லி மாங்களால் ஆதிகாலம் நாற்புறமும் சூழப்பட்டிருந்ததால் நெல்லியடி யென இப்பொழுதும் பெயர் வழங்கப்படுகிறது. சூரபத்மாவினால் பீடிக்கப்பட்ட தேவர்கள் முனிவர்கள் இவர்களாலுண்டாக்கப்பட்ட தீர்த்தமெனச் சொல்லப்படுகிறது. வால்மீகி இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீ ஆத்மநாதக் கடவுள் கிருபையை அடைந்ததாகவும் சொல்லப்படுகிறது. இத்தடாகமானது ஆலயத்திற்கு எதிரிலுள்ளது. இதை நாத தீர்த்தமென்றும் சொல்லப்படும். இதன் வடகரையில் வல்லபை கணபதி காணப்படுவார்.

5 முனி தீர்த்தம். ஆலயத்திற்கு வடபாலில் இருந்ததாகவும் அகஸ்தியரால் உண்டாக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இதை விந்து தீர்த்தமென்றும் சொல்வார்.

6. ஆசுர தீர்த்தம். இத்தடாகமானது மகாபலிச் சக்கரவர்த்தியால் ஆலயத்திற்கு தென்மேற்கில் உண்டாக்கப்பட்டு அதன் தென் மேற்கில் ஓர் ஆச்ரமத்தையும் மகா கணபதியையும் மகா மாயா தேவியையும் எற்படுத்தி அவன் பூஜித்து ஸ்ரீ ஆத்மநாதக்கடவுளின் அநுக்ரகமடைந்ததாகவும் இத்தடாகத்தில் மூழ்கியவர்களுக்கு ஸகல பாக்கியமும் கிடைக்குமென்றும் சொல்லப்படுகிறது. இத்தடாகத்தை தற்காலம் குறிச்சிக்குளமெனச் சொல்வார்கள். மேற்சொல்லிய கணபதி

யோடு மகா மாயாதேவியாக ஸ்ரீ மாரியம்மனும் இத்தடாகத்தின் தென்மேற்கிலேயே விளங்குகின்றனர்.

காளிந்தி நதியின் தக்ஷண தீரத்தில் புளிந்த தேசத்தில் ஜநாலயம் என்ற நகரத்தில் விசுவனென்ற பிராமணனுக்கு விரூபாக்ஷனென்றும் சிவனென்றும் இருபிள்ளைகளிருந்தார்கள். அவ்விருவரும் பாகப்பிரிவினையானதின் பிறகு சிவன் தன் தகப்பன் சிராத்தத்துக்கு பாகல்காய் முக்கியமெனக்கருதி ஓரிடமும் அகப்படாமல் கடைசியாய் தன் ஸஹோதரன் தோட்டத்திலிருந்ததை அவனைக் கேளாமல் பறித்துவந்து சிராத்தம் நடத்திய பாபத்தால் மறு ஜனனம் குரங்காய்ப் பிறந்து கஷ்ட மனுபவித்துக் காடுகளில் ஸஞ்சரித்த காலத்தில் இக்குருந்தவனம் வரப்பெற்று தாகத்தால் அலைந்தபொழுது இத்தடாக தீர்த்தபானத்தால் பாபமொழிந்து நல்லகதியடைந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆதியில் இத்தடாகம் வன்னி, இலந்தை முதலிய மரங்களால் சூழப்பட்டிருந்ததாகப் புராணம் கூறும்.

7. மானவ தீர்த்தம். விபாவசு குமாரன் மனுச் சக்ரவர்த்தியா லுண்டாக்கப்பட்டதாம். இதன் விருக்ஷம், மா. இதன் கரையில் மனுவால் பர்ணசாலையு மமைக்கப்பட்டிருந்ததாம்.

சௌபரி ருஷி தாம்பரபருணியில் ஸ்நானம் செய்யும் பொழுது நடுவில் குஞ்சுகளோடு விளை

யாடிய மீன்களைப்பார்த்து தானும் புத்திர பௌத்திராளோடு வாழவேண்டுமென்று ஆவல்கொண்டு துருவாஸரையடைந்து பிறகு அவர் சொல்லிய படி குந்தவன மடைந்து இத் தீர்த்தத்தில் தநுர் மாதம் ஸ்நானம் செய்து ஸ்ரீ ஆத்மநாதரைப் பூஜிக்க அவரருளால் மாந்தாதாவிடம் சென்று அவருடைய அருபத்து கன்னிகைகளையும் விவாகம் செய்துகொண்டு புத்திர பௌத்திரர்கள் அநேகர்களை யடைந்து சுகமாய் வாழ்ந்தாரென்பது கதையாதலால் இதில் தநுர் மாதம் மூழ்கியவர்கள் புத்திர பாக்கியத்தை அடைவாரெனச் சொல்லப் படுகிறது.

இத்தடாகம் இவ்வூரிலிருந்து மீன்புசலுக்குப்போகும் ரோட்டுக்கு கிழக்கிலுள்ளது. ஆலயத்துக்குத் தென் கிழக்கிலுள்ளது இதைத்தற்காலம் சீராட்டு ஊரணி என்பர்

8. வாயு தீர்த்தம் இது ஆலயத்திற்கு வடமேற்கிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இத் தீர்த்தத்துக்கு மேற்கில் சந்தண விருக்ஷத்தடியில் வாயு ஆதமநாதனை நினைந்து தவம் செய்த இடமாம்.

காஞ்சீபுரம் செட்டி ஒருவன் மோசத் துலாக்கோல்கொண்டு வியாபாரம் செய்து ஸம்பாதித்தவனும். துர்நடத்தையுள்ளவனும். தனக்கிசைந்த பெண்களுடன் பம்பா நதிக்கு துலா ஸ்நானத்திற்குப் போயிருந்த காலத்தில் இந்த

ஸ்தல மகாத்மத்தை ஒருவர் சொல்லக்கேட்டு அவருக்குத்தான் டாம்பீகமாகக்கொடுத்த கொஞ்சம்பொருளுதவியின் புண்யத்தால், அவன் கடைசிக்காலத்தில் பெரு வியாதியால் கஷ்டப்பட்டுப் பொருளிழந்து தவித்தபொழுது, இக்ஷேத்திர புராணம் கேட்டது நினைவு வந்து இக்குந்தவனமடைந்து இவ்வாயு தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து குருந்த மூலரை தரிசிக்கவும் வியாதி நீங்கி நற்புத்தியடைந்து சற்கதி அடைந்தானென்பது புராணம்.

9. காந்தர்வ தீர்த்தம். இதன் விருக்ஷம் மாமரம். ஆலயத்திற்கு கிழக்கிலுள்ளதெனச் சொல்வார்கள். ஹா ஹா, ஹூ ஹூ என்ற இரு கந்தர்வர்களும் இந்த ஸ்தல மகிமையை பிரகஸ்பதி பகவானால் கேள்விப்பட்டு இவர்கள் இங்கு வந்து இத்தீர்த்தம் உண்டு பண்ணி ஈசுவரனையும் தரிசித்தார்களாம்.

மேலே சொல்லிய தீர்த்தங்களைத் தவிற வேறு சில முக்கிய தீர்த்தங்களும் சொல்லப்படும் அவை,

1. இந்திர தீர்த்தம். இதன் விருக்ஷம் நெல்லி. கௌதமருஷியின் சாபத்தை யடைந்த இந்திரன் பிரகஸ்பதி பகவானையடைய அவருத்திரவுப்படி இக்குந்தவன மடைந்து ஆலயத்திற்கு வடகிழக்கில் இந்திர தீர்த்தமேற்படுத்தி அதன்

மேல் கரையில் ஆகண்டல விநாயகரை அமை த்து ஈசுவரனை நோக்கித் தவம் செய்ய ஆத்ம நாதக் கடவுளருளால், தன் சரீர முழுதும் சாபத் தால் காணப்பட்ட பெண்குறிகள், ஆயிரங்கண்க ளாக பிறருக்குத் தோன்றுமென்று அருளிச் செய்ததைப்பெற்று தன்னுலகு சென்றதாகப் புராணத்தாலறிவது.

இத்தடாகம் ஆலயத்திற்கு வட கிழக்கிலு ள்ள கட்டளை மடத்தின் கிழக்கில் மடத்தின் சுற்றுமதிள்களுக்கு உட்பட்டிருப்பது. மடத்து வாயிலில் மேற்கு முகமாய் விளங்கும் விநாயக ரே ஆகண்டல விநாயகர்.

2. பராசர தீர்த்தம். இது வெள்ளாற்று க்கு வடகரையில் மேற்கு திக்கிலுள்ளது இது பாமந்தூரில் ஆதிகேசவப்பெருமாள் ஆலயத்தி ற்கு முன்னுள்ளது.

பராசரர் புத்திரனை வேண்டி ஸரயுநதிக் கரையில் விஷ்ணுவை நோக்கித் தவம்செய்ய அவர் பிரஸன்னமாகி அவர் உத்திரவுப்படி குந்த வனம்வந்து அக்கினிதீர்த்தத்தில் ஸ்நாநம்செய்து மேலே சொல்லிய பராசர தீர்த்தம் உண்டு பண் ணி அங்கு ஆத்மநாதக் கடவுளை நினைத்து ஆரா தித்து தவஞ்செய்து புத்திரனை யடைந்தாரென் றும் பிறகு ஆத்மநாதர் உத்தரவுப்படியே மேற் படி புத்திரர் அத்தீர்த்தக் கரையில் ஆதிகேசவப்

பெருமாளை ஸ்தாபனம் செய்து தன் தகப்பனாகிய பாராசரரையும் பூஜித்தாரென்பது இத்தலபுராண வரலாறு. இத்தீர்த்தத்தில் மூழ்குவோர் புத்திர பாக்கியத்தையும் ஞானத்தையும் அடைவார்களென ச் சொல்லப்படுகிறது. இப்பாமந்தூர் அறந்தாங்கியிலிருந்து இத்திருப்பெருந்துறைக்குவரும் ரஸ்தாவில் திருப்பெருந்துறைக்கு 2 மைல் தூரத்திலுள்ளது.

3. சூரியதீர்த்தம். இது வாபீரூபமாயிருந்ததாகவும் ஆலயத்திற்கு வடமேற்கு மூலையிலிருந்ததாகவும் சொல்லுகிறார்கள். சூரியன் ஸ்ரீ ஆத்மநாதரைப் பூஜிக்க இவ்வாபியை உண்டாக்கியதாயும் பிறகு அவர் அருளால் எங்கும் பிரகாசித்து விளங்கும் சக்தியை அடைந்ததாகவும் சொல்லப்படுகிறது.

4. சந்திர வாபீ. இது சூரிய தீர்த்தத்திற்கு மேற்கிலுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இத்தீர்த்த வரலாறும் முன் தீர்த்தத்தை அநுசரித்தே சொல்லப்படுகிறது. இதில் ஸ்நாநம் செய்தால் க்ஷயரோக நிவாரணமாகும் என்று சொல்லப்படுகிறது.

5. வைதீக தீர்த்தம். வேதங்கள் உருக்கொண்டெழுந்த இடம் தீர்த்தமாக மாறியதால் இப்பெயர் பெற்றதாம். இது அக்கினி தீர்த்தத்திற்கு மேற்கு திக்கிலுள்ளதாகச் சொல்லுகிறார்

கள். இதில் வியாஸர் ஸ்நாநம்செய்து பாக்கிய மடைந்தாராம்.

விதர்ப்பதேசம் காம்பிலியப்பட்டணத்திற்கு ஸமீபத்தில் ஸர்வஸ்மிருத்தி என்ற அக்கிரகாரத்தில் வியவஸாயத்தினுல் பொருள் சேர்த்த விசும்பரன் என்ற ஓர் வைஷ்ணவனிருந்தான். அவனுக்கு கனகை யென்ற ஓர் மூத்ததாரமும் கோமளவல்லி என்ற இளைய தாரமும் ஒரே காலத்திலிருந்தார்கள். கனகை ஒரு புத்திரனைப்பெறவே எங்கு இளையதாரத்திற்கு குழந்தை பிறந்துவிடுமோ என்று நினைத்து தன் புருஷனைக்கொன்றுவிடவே அவளை பிரும்மஹத்தி பிடித்துத்திரியும்பொழுது அவளைக் காட்டுப்பன்றிதின்றுவிடப் பிறகு பிசாசாகப் பிறந்து பல விடங்களிலும் திரிந்து இக்குந்தவனமடைய மத்கு என்ற பக்ஷி இத்தீர்த்தத்தில் தன் இறக்கைகளை நனைத்துக்கொண்டு ஓர் மரத்தில் உட்கார்ந்து தன் இறக்கைகளை உதறியதால் அந்நீர்த் துளிகள் அப்பிசாசத்தின் மீது பட்டமாத்திரத்தில் பிசாச ரூபமழிந்து தன் முன் பாபமெல்லாமொழிந்து சுவர்க்கம் சென்றுளென்பது கதை.

6. இருஷி தீர்த்தம். ஆலயத்தின் மேற்கு திக்கிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. விராட தேசம் மணிபந்தன நகரத்தில் ஷடகோபன் என்ற ஓர் வைஷ்ணவன் க்ஷேத்திர யாத்திரை செய்யும் காலத்தில் பசியால், வழியிலிருந்த கோமுட்டி

யின் எள்ளைத் தின்று தண்ணீர் சாப்பிடவே விழுசி உபாதியாலிறக்க மறு ஜனனம் அக்கோ முட்டி வீட்டில் எருமைக்கடாவாகப் பிறந்து இற க்க இம்மாட்டின் அஸ்தியின் தலைப்பாகத்தை இக் குந்தவனத்திலுள்ள தோட்டக்காரன் ஒருவன் கொணர்ந்து தோட்டத்தில் ஒரு கம்பத்தில் திரு ஷ்டி பரிகாரமாகவைப்பதற்கு இத்தீர்த்தத்தில் சுத்திசெய்யவே அது முன்பாப மொழிந்து நல்ல கதியை அடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

7. லக்ஷ்மி தீர்த்தம். இது கூபரூபமா யுள்ளது. ஆலயத்திற்குள் வடமேற்கில் 3-வது பிராகாரத்தில் அதாவது அச்சுத பூபாலன் மண்ட பத்துக்கு வடக்கிலிருப்பது. லக்ஷ்மி ஆத்மநாத ரைப் பூஜிப்பதற்காக உண்டாக்கியதெனச் சொல் லப்படுகிறது.

8. ஸரஸ்வதி கூபம். ஆலயத்திற்கு தெற் கில் 3-வது தெற்கு பிராகாரத்தில் புது மாணிக்க வாசகர் ஆலயத்திற்குத் தெற்கில் கூபரூபமாயுள் ளது. ஸரஸ்வதிக்கு சாபத்தினால் ஊமைத்தன்மை உண்டாக அந்த சாபவிமோசனத்திற்கு இந்த க்ஷேத்திரம் வந்து ஆத்மநாதக் கடவுளைப் பூஜிக் கவே அவர் அருளால் புத்த அரசன் பெண்ணாக அவதரிப்பாளென்றும் பிறகு மாணிக்கவாசகர் காலத்தில் ஊமைத் தன்மை நீங்குமென்றும் அநுக்கிரகம் செய்யப்பெற்றாள். அவள் ஆத்ம

நாதரைப் பூசனை புரிந்த காலத்தில் இக்கிணற்றை உண்டாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

9. பக்த தீர்த்தம். ஆலயத்திற்கு வடக்கில் முன் சொல்லிய காலகம் ரோட்டுக்கு மேற்கில் தாலூகா போர்டு ஆஸ்பத்திரிக்கு வடக்கிலுள்ளது. இது அடியார்குளமென வழங்கும். இதற்கு விருக்ஷம் சண்பகமெனச் சொல்லப்படுகிறது. இத்தீர்த்தத்தின் வடமேற்கு மூலையில் வனவாஸம் செய்த பாண்டவர்கள் பர்ணசாலை ஏற்படுத்தி இதில் கொஞ்சகாலம் வாஸம் செய்தார்களெனச் சொல்லப்படுகிறது. அந்த இடத்தில் இப்பொழுது திரௌபதி அம்மன் ஆலயமிருக்கிறது.

10. பாண்டவ தீர்த்தம். பக்த தீர்த்தக் கரையில் வசித்த பாண்டவர்கள் கண்ணன் உத்திரவுப்படி ஒரு தடாகம் ஏற்படுத்தி அதில் மூழ்கி ஸ்ரீ ஆத்மநாதக் கடவுளைப் பூஜித்த பாக்கியத்தால் அக்ஞாத வாஸம் அவர்களுக்கு இடையூறின்றி முடியுமெனப் புராணம் சொல்லுகிறது. அவர்கள் கண்ணன் உத்திரவுப்படி ஏற்படுத்திய தடாகமாதலால் அதற்கு கண்ணன் குண்டு என்ற பெயரோடு இப்பொழுதும் அத்தடாகம் இவ்வூரினின்று அரந்தாங்கிக்குப் போகும் ரஸ்தாவுக்கு மேற்கில் ஊருக்கு ஸமீபத்திலிருக்கிறது. இதில் மூழ்குவோர் மிக்க பராக்கிரமத்தோடும் விளங்குவார்களெனச் சொல்லப்படுகிறது.

11. கௌதம தீர்த்தம் இவ்வூருக்கு கிழக்கில் இரண்டு மைல் தூரத்தில் கருங்காட்டில் இத்தீர்த்தமிருக்கிறது. இப்பொழுதுள்ள ஐயனர் ஆலயத்துக்கு முன் இருப்பது. இத்தீர்த்த மேல் கரையில் கௌதமர் பர்ணசாலை கட்டிக்கொண்டு ஆத்மநாதக் கடவுளை நோக்கித் தவஞ்செய்து. தான் பிறிந்த பத்தினியை சீக்கிரம் அடைய அருள்புரியப் பிருர்த்திக்கவே சீக்கிரம் இராம பிரானல் அகலிகை சாபவிமோசனமாகி மகாபதி விரதையாய் கௌதமரை அடைவாளென்று கட்டளையாயிற்ரும்.

12. தொண்டர் குழி. இது நாராயண தீர்த்தத்துக்கு அருகிலுள்ளது தொண்டர்களால் ஏற்படுத்தப்பட்டது

13. சுவேத நதி. காஞ்சீபுரத்தை இராஜதானியாக உடைய சுவேதகேது என்ற சோழ ராஜன் இத்தலத்திற்கு நதியில்லாக் குறையை நீக்கத் தவஞ்செய்ய ஈசுவரன் கிருபையால் கங்கையானது இருபிரிவாக பூமியிற் பொதியமலையினின்றும் காவேரியோடேவந்து பிறகு சிதம்பரத்துக்கு வடக்கே ஒரு பிரிவும் இவ்வூருக்கு வடக்கே மற்றொரு பிரிவுமாக ஓடி ஸமுத்திரத்தை அடைகின்றன. இந்நதிக்கு சுவேதநதி அதாவது வெள்ளாறு என மேற்சொல்லிய அரசன் பெயராலே கூறப்பட்டு வருகிறதெனச் சொல்லப்படுவதோடு இந்நதியில் ஸ்நானம் செய்தால் ஸமஸ்த பாபமும்

விலகுமென்றும் இதிலிட்ட அஸ்திகளுக்கு ஆதாரமாயிருந்தவர்கள் நல்லகதியை அடைகிறார்களெனவும் பின்னும் எல்லா நன்மைகளும் மூழ்குவோர்க்கு உண்டாகின்றனவென்றும் பல பெருமைகளும் சொல்லப்படுகிறது.

மூர்த்தி.

இந்த ஜம்புத்தீவில் முக்கிய ஸ்தலங்களான 1. மாயாபுரம், 2. காசி, 3. காஞ்சி, 4. அவந்தீபுரம், 5. தேவபுரம், 6. மதுராபுரம், 7. சிதம்பரம் இவைகளில் மாயாபுரமாகிய குந்தவனம் மூலஸ்தானமாகவும், சிதப்பரம் நர்த்தன ஸ்தானமாகவும், மதுரை லீலா ஸ்தலமாகவும், தேவபுரம் வகையரு புண்யஸ்தலங்களாகவும், காசி முக்தி ஸ்தலமாகவும் விளங்குகின்றன.

ஆதியில் ஸர்வேசுவரனாகிய ஸ்ரீ ஆத்மநாதக் கடவுள் ஆதிகைலாஸமாகிய இக்குந்த வனத்தில் ஜோதி வடிவமாய் பிரகாசித்தனர். பிறகு குந்த விருக்ஷ ரூபமாகவே விளங்கினர்.

குருந்த விருக்ஷமானது ஸ்வர்ணமயமாய் மும்மூர்த்தி ஸ்வரூபமான மூன்று கிளைகளுள்ளதாய் சுருதி ஸ்மிருதி ஆகம புராணங்களாகிய துணைக் கிளைகளுடையதாய் முக்குணமயமான

மூன்று தளங்களையுடைய இலைகளாலும் சிவ ஞான மயமான புஷ்பங்களாலும் நிறைந்தும் தரிசிப்போர்கள் விரும்புவதைக் கொடுப்பதுபோல் பலபாரங்களால் வணங்கிய கிளைகளையுடையதாயும் வேதாந்தஸார ரூபமான ரஸம் பொருந்தியதாயும் பிரும்ம நிஷ்டர்களான வண்டுகளாலும் பக்ஷிக்கூட்டங்களாலும் நிறைந்த விருக்ஷநுனியையுடையதாயும் கொடி மின்னல்போன்ற காந்தியுடைய நவரத்னமயமான அடியையுடையதாயும், பிரும்ம ஸ்வரூபமான வேறுடனும் உன்னதமாய் ஆகாசத்தை மறைத்த கிளைகளோடும் விளங்கிற்று.

ஆத்மநாதக்கடவுள் பிறகு பிரும்மதேவரால் பிரார்த்திக்கப்பட்டவராய் குருந்தவிருக்ஷத்தின் தென்பாகத்தில் ஸ்வர்ணமயமாய் ஸஹஸ்ரதளகமலம்போன்ற நடுவைவுடையதாய் நாற்கோண பீடவடிவமாய் பூஜைக்கு யோக்கியமாய் பீடரூபியாய் ஆவிர்ப்பவித்தனர்.

இந்த பிர்ம்மத்தினின்றும் பிரிந்த பராசக்தி ஸ்ரீசக்ரமத்யமாய் ஸ்ரீ பாதுகாரூபிணியாய் பீடசக்தியாய் அவதரித்தனள்.

பிறகு பிர்ம்மாவால் சிவசக்தி பீடங்களும் ஸ்தாபிக்கப்பட்டன.

ஆத்மநாதக்கடவுள் இங்கு பதினெட்டுத் திருநாமங்களோடு விளங்குகின்றனர்.

1. ஆத்மநாதன். எல்லா உயிர்களுக்கும் ஈசன் நித்திய சுத்த பரிபூரணமான பேரொளியாய் கமலபீடத்தில் ஸஹஸ்ரதள கமலமத்தியில் அர்ச்சிப்பதற்கும் தரிசிப்பதற்கும் யோக்கியமாய் சிருஷ்டி ஸ்திதி லயத்திற்குக் காரணமாய் ஜோதிமயமாய் பிரணவஸ்வரூபமாய் சூக்ஷ்ம சூக்ஷ்மமாய் எல்லாப்பொருள்களுக்கும் காரணமாய் ஆத்மநாதனெனப் பெயர் வகித்து விளங்குகிறார். தான் இவ்விதம், ஆதிகைலாஸக்ஷேத்திரத்தில், விளங்குவதாயும் இந்த ஸ்தலம் பிரும்மானந்தத்திற்கு இருப்பிடமென்றும், வேதங்களால் புகழப்பட்டது என்றும், அழிவற்றதென்றும், நிர்மலமானதென்றும், ரகஸ்யமானதென்றும் சிவக்ஷேத்திரங்களுள் ஆதியானதென்றும். ஈசுவரனே ஈசுவரிக்கு கைலாஸத்தில் உபதேசித்ததாகச் சொல்லப்படுகிறது.

ஆத்மநாதரென்ற பதத்திற்கு ஆத்மாவுக்கு நாதரா அல்லது ஆத்மாவாகிய நாதரா, அல்லது ஆத்மாக்களுக்குள் சிரேஷ்டரா எப்பொருளுள்ளது எனத்தெரிந்து கொள்ளவேண்டுவது முக்கியம். எல்லா அண்டங்களையும் வகித்து விராட்டாய் விளங்குபவன் ஆத்மா; அவனுக்கும் நாதனாய் கோடிமின்னல் பிரகாசமாய் பரிபூர்ணமாய் விளங்குபவன் ஆத்மநாதனாவான்.

2. எல்லோருக்கும் மேற்பட்டவராய் விளங்குவதால் பரமஸ்வாமி, யெனவும்.

3. பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரர் மூவருக்கும் இக்ஷேத்திரத்தில் உபதேசம் செய்தனராதலால், திருமூர்த்தி தேசிகரெனவும்.

4. நான்கு வேதங்களும் உருவோடு இங்குவந்தமைபற்றி, சதுர்வேத புரீசர் எனவும்.

5. சிவயோகவனத்துக்கு ஈசன் ஆனதால் சிவயோகவனுதீசர் எனவும்.

6 குந்தவனத்திற்கு நாதன் ஆனதால் குந்தவனேசரெனவும்.

7. பிராமணர்களுக்கு இக்ஷேத்திரத்தை மீட்டுக்கொடுத்தவராதலால் சிவக்ஷேத்திர நாதர் எனவும்.

8. ச்சன்னவன்மாகிய இத்தலத்துக்கு அதிபதியானதால் ச்சன்னவனேசர் எனவும்.

9. ஸர்வஜீவராசிகளுக்கும் நாதரானதால் ஜனவந்நாதர் எனவும்.

10. இக்ஷேத்திரத்தில் ஈசன் மாயாபிம்பத்தோடு விளங்குவதால், மாயாபுர நாயகர் எனவும்.

11. முந்நூறு அந்தணர்களுக்கு பிராம்மண உபாத்தியாயராக வந்து காக்ஷி தந்தமையால் விப்ர நாதர் அல்லது-வித்யாசாரி எனவும்,

12. பிராம்மணப் பிள்ளைகளுக்கு உபாத்தி யாயராக வந்து வேதம் முதலியவைகளை உபதே சித்தமையால் சப்த நாதர் எனவும்.

13. பூமியில் ஒரு கஜ ஆழத்துள் எங்கும் இவ்வூரில் ஜலம் காட்டிய திருவிளையாட்டால் பிரகத் தீர்த்தேசர் எனவும்.

14. மூந்நூற்றுவருக்கும் குருஸ்தானமாய் விளங்கினமையால் திருசத தேசிகர் எனவும்,

15. பாண்டியனுக்குக் குதிரை கொண்டு போன திருவிளையாட்டால் அசுவ நாதர் எனவும்,

16. பிரளயத்திலும் அழிவில்லாத இக்ஷே த்திரத்துக்கு நாயகரானதால் சிவபுர நாயகர் என வும்.

17. எல்லா தெய்வங்களுக்கும் மேற்பட்ட வரானதால் மகாதேவர் என்வும்,

18. மூன்று உலகுகளுக்கும் குருநாதனாத லால் திருலோக குரு எனவும், ஆக இந்தப்பதி னெட்டுப் பெயர்களும் ஸ்வாமிக்குச் சொல்லப் படும்.

மேற்சொல்லிய திருநாமங்களோடு பின் விவரிக்கப்பட்ட ஆறு ஸபைகளோடு ஆத்மநாதர் விளங்குவதால் ஷட்ஸபாரமணர் என்றும்,

ஜனனம், ஸ்திதி, மரணம், திரோதானம், மாயை, முதலிய எல்லா பந்தங்களேயும் முறையே விடுவிக்கக்கூடிய கலாத்வா, தத்வாத்வா, புவனுத்வா, வர்ணுத்வா, பதாத்வாவோடும் ஸதாசிவ ஸாயுஜ்யததைக்கொடுக்கக் கூடிய மந்தராத்வாவோடும் ஈசுவரன் இங்கு விளங்குவதால் ஷடத்வாராதன யோக்கியர் என்றும் இன்னும் பலகாரணங்களால் ஷடாதாரோர்த்தவஸன்னிஷ்டர் என்றும் ஷடுத்கர்ஷஸ்தலேசுவரர் என்றும் அழைக்கப்படுவார்.

ஜநவங்நாதர் என்ற பதத்திற்கு ஆளுடையார் என்றும் அர்த்தமாகுமாதலால் அப்பெயராலும், தெற்கு நோக்கியிருத்தலால் தக்ஷிணுமூர்த்தி என்றும் சொல்லப்படுவார்.

துங்கபத்திராதீரம் தர்மாதித்திய புரமென்ற நகரத்தில் யல்லயாஜி என்ற பிராம்மண சிரேஷ்டன் ஒருவனிருந்தான் அவன் மனேவியின் பெயர் விசாலாக்ஷி இவர்களுக்குக் குழந்தையில்லாக் குறையால் கடைசியாய் மேற்படி யல்லயாஜி, மனேவியை கிரகத்திலிருக்கச்செய்துவிட்டு, வனத்துக்குச் சென்றுவிட்டனர். விசாலாக்ஷி அம்மாள் மகா பதிவிருதையாய் க்ஷேத்திராடனங்கள் செய்துகொண்டு வந்தாள். அதே ஊரில் மஞ்சரி என்ற பிராமண ஸ்திரீ துர்நடத்தையுடையவளாய் இருந்ததால் அவள் புருஷன் பிரயாகைத்தீரம் போய்விட்டதால் இவள் தன் மனதுக்கு உகந்தவர்களோடு துன்மார்க்கத்தை அநுஸரித்த

வளாய் கடைசியாய் எல்லோராலும் இகழப்பட்டவளாய் பெருவியாதியால் பீடிக்கப்பட்டுத் துன்பத்தை அனுபவித்துவரும் நாளில் ஒரு நாள், விசாலாக்ஷி குருந்தவனக்ஷேத்திரம் வந்து தரிசித்து குருந்த மூலத்தடியிலுள்ள மிருத்திகையோடு தனதூர்த்தெருவில் மஞ்சரி வீட்டுவாயில் வழியாய் ஆத்மநாதா! சப்தநாதா! சிவக்ஷேத்திர நாதா! என்ற நாமங்களை உச்சரித்துக்கொண்டு போகும்பொழுது இந்த நாமங்கள் மஞ்சரியின் காதுகளிற்பட்டதும் கொஞ்சம் தேறுதலுள்ளவளாய் எழுந்திருந்து வீதியில் வந்து விசாலாக்ஷியின் பாதங்களில் வணங்கவே விசாலாக்ஷி கருணைகொண்டு, எல்லாம் தெரிந்து இவளுக்கு மேற்படி நாமங்களை உபதேசித்து குருந்தமூலத்தின் மண்ணில் கொஞ்சம் கொடுத்து அதிற் சிறிது ஜலத்தில் கரைத்து உள்ளுக்கு சாப்பிடச்செய்தும் மீதத்தை உடம்பில் கரைத்துப் பூசும்படி செய்தும் அகன்றாள். மஞ்சரி பக்தியோடு இவ்விதம் செய்ததால் பாபங்களெல்லாம் விடுபட்டு வியாதி நீங்கி நல்மார்க்கத்தை அநுஸரித்து இறந்து பத்மாவதி என்ற பெயருடன் சிரஞ்சீவியாய் இந்தாலோகத்திலிருப்பதாகப் புராணம் சொல்லுகிறது. ஆதலால் மேற்சொல்லிய நாமங்களினுடையவும் குருந்த மூல விருக்ஷத்தின் அடியிலுள்ள மண்ணினுடையவும் மகிமை நன்றாய்த் தெரிகிறது.

மேற்படி மண்ணை ஜலத்தில் கரைத்து சாப்பிட பெருவியாதி, குருடு, செவிடு, மூடம், ஊமை,

பைத்தியம் முதலிய எல்லாத் தீராதநோய்களும் தீருமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விருக்ஷம் இவ்வூர் ஆலயம் 3வது வடக்கு பிராகாரத்திலும் இவ்வூருக் கருகில் பல விடங்களிலும் காணலாம்.

அம்பிகை தாக்ஷாயணியாயிருந்து தக்ஷயாகத்தில் அக்கினிப் பிரவேசம் செய்து பின்னர் பர்வதராஜ புத்திரியாய் அவதரித்து சிவபிரானை மணம்புரியத் தவம்செய்த காலையில் ஆதிகைலாஸ மகாத்மத்தை அம்பிகைக்கு ஈசுவரன் கைலாயத்தில் முன் உபதேசித்த காலத்தில் கூட இருந்து கேட்டுக்கொண்டிருந்த நந்திதேவர், ஸனத்சமாரருக்கும் பிறகு ஸனத்குமாரரால் நாரதருக்கும் பிறகு நாரதரால் பார்வதிக்கும் சொல்லப்பட்டு நாரதரால் சொல்லப்பட்ட பார்வதி தேவி இக்குந்தவன க்ஷேத்திரம் வந்து ஆத்மநாதக் கடவுளைப் பூசித்து மணம் முடிக்க நினைத்து இங்கு வந்து தவஞ்செய்தனள். தவஞ்செய்யத்துவக்கியவுடன் ஸம்ஸர்க்க விநாயகரேன்ற விநாயகரை ஸ்தாபித்துப் பூஜித்தும பிறகு தவப்பிள்ளையாரையும் உண்டாக்கி அவரைப் பூஜித்தும் உடனே பராசக்தி பீடத்துக்கருகில் பத்மாஸனத்தில் யோகத் நின்றுள்.

இப்பொழுது மேற்சொல்லிய தவப் பிள்ளையார் உள்பிராகாரத்தில் யோகாம்பிகை ஆலயத்திற்கு முன், பல்கணிக்கதவுக்கு ஸமீபத்தில் விள

ங்கும். இந்தப் பிராகாரத்திலேயே சேர்க்கை விநாயக ரென்ற ஸம்ஸர்க்க விநாயகர் தென் மேற்கு மூலையில் ஸ்ரீ மாணிக்கவாசகர் உத்ஸவ மூர்த்திக்கு மேற்கில் கிழக்கு நோக்கிக் காணப்படு வார். இவரை சோக்க விநாயகரெனவும் சொல் வதுண்டு. பார்வதிதேவிக்கு ஸாதகமாக வந்த ஜயை, விஜயை இருவர்களும் மேற்படி அம்பிகை ஆலய ஸன்னிதியில் யோகத்துக்குப் பாதுகாப் பாய் நிற்கிறார்கள்.

எல்லாமறிந்த ஸர்வேசுவரன், யோகத்து க்கு இடையூறின்றிப் பாதுப்பதற்காக வீரபத்தி ரக்கடவுளை அனுப்ப அவரும் அம்பிகை ஸன்னி திக்கு எதிரில் மேற்கு நோக்கி எல்லா ஆயுதங்க ளோடும் நின்று காத்துவருகிறார். இவருக்கு மூன் சங்காதோஷங்கள் நிவர்த்தியாகின்றன. பார்வதிதேவி ஆத்மநாதக் கடவுளை நினைத்து யோகம் செய்ததும் அவர் கிருபைகூர்ந்து அம் பிகையைப் பார்த்து அவளை அவள் பிதாவிடம் செல்லலாமென்றும் தான் உடனே அங்குவந்து திருமணம் முடிப்பதாயும் வாக்களித்தும் ஆதி பராசக்தி பிரும்மதேவனால் பூஜிக்கப்பட்டவளாய் நிற்குணமாய் இக்ஷேத்திரத்தில் விளங்குகிறபடி யாலும் அவளுக்கும் பார்வதி தேவிக்கும் பேத மில்லையாதலாலும அவளை சிவயோகீசுவரி என்ற பெயருடன் இங்கு நிற்குணஸ்வரூபத்தோடு பிர காசித்துக் கொண்டிருக்கவும் கட்டளையிட்டருளி னார் எனவும சொல்லப்படுகிறது.

விராட் ஸ்வரூபிக்கு பிருமரந்திரஸ்தானம் இக்ஷேத்திர மென்பர்.

மூலாதாரம், குதபீஜங்களுக்கு மத்தியிலுள்ளது. இந்த ஸ்தானமானது, வ முதல் ஸ முடிய அக்ஷர ரூபமாக நான்கு இதழ்களுடன் முக்கோணமத்தியுடன் பிரணவபீஜத்துடன் குண்டலினி சக்தியுடன் வல்லபை சேர்ந்த விக்னேசுவரருடன் மாணிக்கம்போன்ற நிறத்தோடு விளங்குகிறதென்றும்,

ஸ்வாதிஷ்டான ஸ்தானமானது, குஹ்யப் பிரதேசத்தில், ப (3 வது) முதல் ல முடிய, ஆறு இதழ்களுடன் நாற்கோண மத்தியுடன், நகார பீஜத்துடன் ஸ்வர்ணப் பிரகாசத்துடன், ஸரஸ்வதி சக்தியோடுகூடிய பிரும்ம தேவருடன். விளங்குகிறது என்றும்,

மணிபூரகம், நாபிப் பக்கத்தில, ட (3 வது) முதல் ப (2வது) வரையில், பத்து இதழ்களுடன் வில்போன்ற மத்தியுடன், ம, பீஜத்துடன் நீருண்டமேகம்போன்ற நிறத்துடன், லக்ஷ்மி கூடிய விஷ்ணுவுடன் விளங்குகிறது என்றும்,

அநாஹதஸ்தானம் ஹிருதயபாகத்தில், க முதல் பனிரெண்டு இதழ்களுடன் முக்கோண மத்தியுடன், சி, பீஜத்துடன் ஸ்படிக வர்ணத்துடன், ஸர்வாணி சக்தியோடு கூடிய உருத்திர மூர்த்தியுடன் விளங்குகிறது என்றும்,

விசுத்தி, அடி-நாக்கு ஸ்தானத்தில் அ முதல் ஆ: முடிய 16 இதழ்களுடன் அருகோண வடிவுடைய மத்தியுடன் வ, பீஜத்துடன் புகைபோன்ற நிறத்துடன் ஈசுவரீ சகதி கூடிய கேசவருடன் விளங்குகிறது என்றும்,

ஆக்ஞாஸ்தானம் அல்லது மோக்ஷ ஸ்தானம் புருவங்களின் மத்தியிலுள்ளது. ஹ, . ள என்ற இரண்டு இதழ்களுடன் விருத்தமாயுள்ள மத்தியுடன் ய. பீஜத்துடன் ஸ்படிகம்போன்ற நிறத்துடன் மனோன்மணி சக்தி கூடிய ஸதாசிவ மூர்த்தியுடன் விளங்குகிறது என்றும்,

இதற்குமேல் பத்து ஸ்தானங்களிருக்கின்றனவென்றும்,

கேசமுண்டாகிற இடத்தில் சிரோதிகை, அதன்மேல் அர்த்தேந்து அதற்கும்மேல்பிந்து, குளபதம், நாதம், நாதாந்தம் வியாபினி, ஸமனை, உன்மணி, துருவஸ்தானம் இவைகள் ஒன்றன் மேலொன்றாக விருக்கின்றனவென்றும்,

உன்மணி முதல் நாதாந்தம் வரை நான்கு ஸ்தானங்கள் ஊர்த்துவ மூலமென்றும், எல்லாவற்றிற்கும் மேற்பட்டதாய் நிற்குணமாய் அபின்னசக்தியோடுகூடிய ஆத்மேச அதிகாரமுடையதெனவும்,

நாதம் முதல் சிரோதிகை வரை ஐந்தும் மத்திய மூலமாய் நடன ஸ்தானமாய் துர்யத்திற்கு

மேற்பட்டதாய் குறுகுணமாய் பராசக்தியோடு கூடிய நடராஜ அதிகாரமுடையதென்வும்,

விசுத்தி முதல் ஸ்வாதிஷ்டானம் வரை நான் கும் அதோமூலமாய் துர்யமாய் ஸகுணமாய் ஆதார சக்தியோடுகூடிய கணேச அதிகாரமு டையதெனவும் சொல்லப்படுகிறது.

இவ்விதம் பதின் மூன்று போகபாக்கியா கிய துருவஸ்தானம், ஆக்ஞாஸ்தானம் மூலாதார ஸ்தானம இம்மூன்றும் ஸகஸ்ரதள கமலவாஸியா கிய ஸ்ரீ ஆத்மநாதக் கடவுளுக்கு இருப்பிடங்க ளென்றும் சொல்லப்படும். இந்த குந்தவன க்ஷே த்திரம் ஷோடசாந்த க்ஷேத்திரமென்று சொல் லப்படுகிறது.

தொண்டர்கள். ஆதிகாலத்தில் பிரும்மா இந்தக் குந்தவனத்தில் பூஜித்து பிறகு தான் ஸத் தியலோகம் செல்ல நினைந்ததால் ஆத்மநாதக்கட வுள் ஸன்னிதியில் ஓர் ஓமம் செய்ய அந்த ஓமத் தீயினின்றும் ஒரு புருஷர் கிளம்பினர் அவர் அக் கினியிலுண்டானதால் அக்கினிவசியர் எனச் சொல்லப்பட்டார் அவருக்கு தீக்ஷாநாமம் ருக்ஷா யணர் அல்லது ரௌக்ஷாயணர் என்று பிரும்ம தேவரால் கொடுக்கப்பட்டது. அவருக்கு மிக்க உயர்வான மந்தரராஜஸ்தவத்தையும் ஷட்த்வாரா தனவிதியையும் முப்பத்தொன்பதுவர்ணங்களுடன்

சிவசக்தி ஸம்பந்தமான அஜபாவென்ற குருபஞ்சா க்ஷரத்தையும் நித்திய நைமித்திகா அர்ச்சனை விதி களையும் உபதேசித்தார். பிறகு இவருக்கு ஸாத கமாக வஸ்ஸன், குஸ்ஸன், அங்கிரஸன், கர்கன், மூத்கலன், அக்ஷி ஹரிதன், பிருகு, பாத்வாசன், கபிலன், கண்வன் என்ற பதினொரு பேர்களை யுண்டாக்கி மௌக்ஷாயணரை ஸ்ரீ ஆத்மநாதக் கடவுளை பூஜை செய்ய ஏற்பாடு செய்தார். மௌ க்ஷாயணர் சூத்திரம் அக்னிவேசிய மென்னும் சூத்திரம்.

மந்திர ராஜஸ்த்வம் இது ஆதியில் குந்தவ னேசரால் சதுர்முகனுக்கும் பிறகு சதுர்முகனா கிய பிரும்மாவால் ஆக்னிவசியருக்கும் உபதே சம் செய்யப்பட்டது. இது பஞ்சாக்ஷரத்தை ஆதி அக்ஷரமாகவுடையது. பிரும்மாருஷி, அநு ஷ்டுபுசந்தஸ், ஆத்மநாதர்தேவதை, பிரணவம் பீஜம், மூலப்பிரகிருதி சக்தி, மான்மதம் கீலகம், அபீஷ்டார்த்த ஸித்தியர்த்தேஜபே விநியோக: ஹ்ராம் இத்யாதிகராங்கந்யாஸம், வ்யாகிருதியால் திக்பந்தம், தர்யாதீதேதி த்யானம், லம் இத்யாதி பஞ்சோபசாரம், செய்து பிறகு ஓம்கார கம்பிய முதல் ஸதாசிவோம் என்ற அந்தத்தையுடைய நூத்தி இருபத்தெட்டு நாமங்களுடன் கூடியது. தக்ஷணாயன உத்தராயனங்களிலும் சூர்ய சந்திர கிரகண காலங்களிலும், ஸோமசுக்ர வாரங்கள் அமா பௌர்ணமி திதிகள், தனுர் மிதுன மாதங் கள் கார்த்திகை திருவாதிரை நக்ஷத்திரங்கள்,

மகாகிருஷ்ண சதுர்தசி ஆவணி மூலம் ஜன்ம நக்ஷத்திரங்கள் இவைகளில் வில்வதளம், அரளி, துளசி, மல்லிகை, முல்லை, தாமரை, அருகு, மந்தாரை, வெள்ளெருக்கு, இவைகளால் மேற்சொல்லிய மந்திரஸித்தி யுள்ளவர்களைக்கொண்டு ஸ்ரீ ஆத்மநாதக்கடவுளை பூஜை செய்தால் விசேஷம் எனவும் சொல்லப்படுகிறது.

பிறகு கலியுக ஆரம்பத்தில் மேல்சொல்லிய ருக்ஷாயணர் பிரும்மதேவர் உத்திரவுப்படி அத்திரி முனிகுமாரி கலாவதியை விவாகம் செய்துகொண்டு சிவஸ்வாமி, ரோமேசன் என்ற இரண்டு பிள்ளைகளைப் பெற்றார்.

வத்ஸன் முதலியவர்கள் காச்யப முதலிய கோத்திரங்களிலுள்ள கன்னிகைகளை விவாகம் செய்து கொண்டார்கள்.

மேற்சொல்லிய ருக்ஷாயணர் ஸந்ததியார்களை குந்தவனத்தில் பிரகாசித்த முன்னூறு பிராமணர்கள். இவர்களே தொண்டர்களாய் ஆத்மநாதக்கடவுளையும் சிவயோகாம்பிகையையும் சந்ததி பரம்பரையாய் இன்றைக்கும் பூஜை செய்துவருபவர்கள்.

பிரும்மா ருக்ஷாயணரிடம் பூஜையை ஒப்புவித்து விசுவகர்ம்மாவைக்கொண்டு ஆலயத்தில் ஆருசபைகளையும் மதில்களையும் கோபுரங்களையும்

கட்டுவித்தாரென்றும் சொல்லப்படுகிறது. பிற்காலத்தில் புரூரவன் முதலிய சக்கிரவர்த்திகளாலும் பழுது பார்க்கப்பட்டனவெனவும் அறிகிரோம்.

இத்திருப்பெருந்துறைக்கு இப்பொழுதும் பிரும்மா முதலிய தேவர்கள் விசேஷகாலங்களில் வந்து ஸ்ரீ ஆத்மநாதனை தரிசித்துப் போவதாகவும் பின்னும் பல விஷயங்களையும் புராணம் கூறும். இளை, இளன், ஜனகன், நைமிச முனிவர் முதலிய பலர்களும் வந்து தரிசித்து நல்ல பலன்களையடைந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இவ்வூருக் கருகிலுள்ள காளையார் கோவில் கண்வகோத்திரம் பிங்களாக்ஷன் என்ற பிராமணன் பாண்டியனிடம் துலாபாரம் வாங்கி வரும் வழியில் புலியால் கொல்லப்பட்டு பிறகு பிரும்மரக்ஷஸாக ஜனித்து அலைந்தானும். அவன் பிள்ளை சோமகன் பிதாவின் அஸ்திகளைக் கண்டெடுத்து, காசிகொண்டுபோக எண்ணி இவ்வூரில் வைத்த விடத்தில் அஸ்திகள் அங்கேயே இலிங்கமாகி அவன் பிதா முக்தி அடைந்தானென்றும், கண்ணங்குடி என்று சொல்லப்படுகிற அரிமந்திரமென்னும் ஊரின் பிரகந்நாயகி ஸமேதரான மந்தரேசுவரர் ஆலயத்தின் வெளியில் ஓர் நாள் தீவட்டிச் செண்டுகள் எரிந்துகொண்டிருந்தவைகளில் ஒன்றைத் தனக்காக வெளிச்சத்திற்கு எடுத்துக் கொண்டுபோன பாபத்தால் சுமத்திரன்

என்ற பிராமணன் நாயாகப் பிறந்தபிறகு இக்ஷே த்திரம்வந்து முக்தி யடைந்தானென்றும், திருப் புனல்வாசல் அதாவது விருத்த காசியில் விருத்த புரீசர் ஆலயத்தில் நெய்விளக்குப் போட்டு வந்த ஜம்பு சாஸ்திரியன் என்ற பிராமணன் பாத்திரத் தில் ஒட்டியிருந்த நெய்யை கவனியாமல் வீட்டு க்குக்கொண்டுபோன பாபத்தால் மறு ஜனனம் பவானியுங் காவிரியுங் கூடுமிடத்தில் நீர்ப்பாம் பாய் ஜனித்துப் பிறகு பல ஜன்மங்களெடுத்துக் கடைசியாய் இக்ஷேத்திர தீர்த்தத்தில் மூழ்கவே முக்தியடைந்தானென்றும் பின்னும் அதர்மன், இலக்குமி, வேடர்கள் நற்கதியடைந்தார்களென வும் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

பின்னும் பல இதிகாசங்களையும் ஸ்காந்தத் தின் பாகமான ஆதிகைலாச க்ஷேத்திரமான இத் தலமான்மியத்திற் காணலாம். ஸ்ரீ ஆத்மநாதக் கடவுளுடைய முக்கியமான திருவிளையாடல்களிற் சிலவற்றையும் அவைகளுக்கு முக்கிய ஸம்பந்த மாயுள்ள சில இதிகாஸங்களையும் சொல்வோம்.

புரூரவன் அகஸ்தியர் வந்த வரலாறு

ஆதிகாலம் புரூரவன் தௌமியரால் கேள் விப்பட்டு இக்குருந்தவன க்ஷேத்திரம் வந்து ஆத்ம நாதரை தரிசித்து ஷட்ஸபாமண்டபங்களைப்புதுக் கிமுந்நூறு அந்தணர்களுக்கும் கிரகங்கள் அமை

த்து ஈசுவரனுக்கு ஏராளமாய் ஆலயத்தைச் சுற்றி அநேக மைல்தூரம் நிலங்களும் கொடுத்து அவைகளை மேற்சொல்லிய பிராமணர்கள் வச மாக்கிச் சென்றான். அதன் பின்னர் நாளடை வில் வேடர்கள் உபத்திரவத்தால் அநேகம் பிரா மணர்கள் முந்நூறு பேர்களைச்சேர்ந்தோர் பல விடங்களுக்கும் போய்விட்டமையால் சீர்குலைந்து போனதைக்கண்ட அகஸ்திய முனிவர் இவடம் வந்து ஆலயத்திற்கு நான்கு திக்கிலும் சிலமைல் தூரம்வரை சுத்தப்படுத்தி சிலைகளை எல்லைகளாக நாட்டி உபத்திரவம் நீக்கினார். அவர் இவ்வூருக்கு கிழக்கில 2மைல் தூரத்துள்ள சிருமருதூர் கிரா மத்தில் ஓர் சிவாலயத்தை பிரதிஷ்டை செய்தும் அதற்கு 3மைல் கிழக்கில் வெள்ளாறு உத்திர வாகினியாகச் செல்லுகிற இடமாகிய கள்ளக் காத்தான் சுரோத்திரிய பாகத்தில் ஸ்ரீ ஆத்மநாதர் தோப்புக்கு வடபாகத்தில் ஓர் ஓமகுண்டம் ஏற் படுத்தியுமிருக்கிறார். இந்தகுண்டம் இப்பொழுது தடாக வடிவமாக இருக்கிறதெனச் சொல்லு கிறார்கள்.

ஆத்மநாதர் கீழ்நீர் காட்டியது.

அகஸ்தியர் சீர்திருத்தம் செய்த கொஞ்ச காலம் பின்னர் மதுரையில் அரசுபுரிந்த குமார பாண்டியன் என்ற வத்ஸ பாண்டியன் காலத்தில்

அவன் மந்திரி குரும்ப ஜாதியார்களுக்கு அதிபதியானவன் ஒருவனிருந்தான் அவனுக்கு பந்தக்களும் பூர்வ வாஸஸ்தானமும் திருப்பெருந்துறைக்கு பக்கமானதால் இவ்வூரின் நில வளப்பத்தை அறிந்து இவ்வூரைச்சுற்றிய பூமியை தன்னுடையதாக்கிக்கொள்ள எண்ணங்கொண்டு இவ்விடம் வந்து அகஸ்தியரால் நாட்டப்பட்டிருந்த எல்லைக்கற்களை எடுத்து தன் முன்னோர்கள் பெயரைக் காட்டக்கூடிய கற்களை நாட்டி பிராம்மணர்களை இம்சித்து நிலங்களைக் கவர்ந்து கொண்டான். முந்நூறு மறையவர்களிலநேகர் வேறிடங்களுக்குச் சென்றுவிட்டனர். ஸ்ரீ ஆத்மநாதக்கடவுள் விருத்தவேதியர் வடிவங்கொண்டு பிராமணர்கள் சென்ற விடங்களுக் கெல்லாம் போய் அவர்கள் நிலங்களை மீட்டுத்தருவதாக வாக்களித்து நம்பிக்கையுண்டுபண்ணி அவர்களை திருப்பெருந்துறைக்கு அழைத்துவந்து அங்கிருந்த சில பிராம்மணர்களையும் சேர்த்து அழைத்துக்கொண்டு மதுரை சென்று அரசனிடம் சொல்ல பிராம்மணக்கிழவரை தஸ்தாவேஜிகள் கேட்க அவர் பூர்வம் புரூரவச்சக்கிரவர்த்தியாலும் பின்னர் அகஸ்தியராலும் கொடுக்கப்பட்டிருந்த ஓலை தஸ்தாவேஜிகளைக் கொடுக்கவே அரசன் தன் மந்திரியான லுண்டாக்களைக் கேட்க திருப்பெருந்துறையும் சுற்றுப்புரமும் தன் முன்னோர்களிடமிருந்து தனக்குக்கிடைத்த தென்றும் பிராம்மணர்கள் வெகுகாலமாய் குத்தகைக்கு வாங்கி அனுபவித்து வந்தவர்

களெனவும் தன் முன்னோர்கள் கற்கள் பெயர் களுடன் நாட்டப்பட்டிருக்கின்றன எனவும் தன க்கு தஸ்தாவேஜிகளிருக்கின்றதெனவும் சொல்லி சுந்தரமூர்த்தி முத்திரையோடுங்கூடிய சாஸன முங்கொடுத்தான். இதைக்காட்டவே அரசன் விருத்தரைச்சினந்து கேட்க அவர் அகஸ்தியர் சிலைகளை மந்திரி அழித்துப் புதிதாய் நாட்டிய விதத்தைச் சொல்லித் தான்சொல்வதே உண்மை யெனவும் அரசன் ஒன்றுந் தோன்றாது சபை யோர்களுக்கு இதைக்கேட்டு நியாயம் சொல்ல உத்திரவு செய்ய அவர்கள் இருதிறப்பு ஓலைகளை யும் பார்த்து ஒன்றுந்தோன்றாமல் அவர்கள் பூமி க்கு அடையாளம் உண்டோவென்று கேட்க பாண்டிய மந்திரி தனது ஊராகிய திருப்பெருந் துறையில் 40 பனை அளவு ஆழம் தோண்டினலும் ஜலம் ஊராதெனச் சொல்லவும் உடனே அந்தண க்கிழவர் ஒருகஜ ஆழத்துக்குள் நீர் ஊருமென்றார். உடனே அரசன் தன் ஸபையோரை திருப்பெ ருந்துறை போய் பரீக்ஷை செய்து பார்த்து நிலங்களை உரியவர்களிடம் ஒப்புவிக்கும்படி கட் டளையிடவே மந்திரிக்கு சந்தோஷமும் கிழப்பிரா மணர் தவிர மற்ற மறையோர்களுக்குக் கவலையும் அதிகரித்தது. அக்கட்டளைப் பிரகாரம் இக்குந்த வனம் வந்து மந்திரிகாட்டிய இடத்தில் முதலில் கிழவர் மண்வெட்டியை ஓங்கிநாட்டவே தீர்த்தம் பிரவாகித்து எழுந்ததைப் பார்த்த யாவரும் ஆச் சரியித்தார்கள். இந்த இடத்திற்கே கீழ்நீர்காட்டி என இப்பொழுதும் பெயர் வழங்கும். மந்திரி

உடனே கிழவன் மந்திரவாதியென்றும் ஆதலால் இவ்விடத்தில் ஜலம்வந்துவிட்டதென்றும் தான் காட்டும் இடங்கள்தோறும் ஜலம்காட்டிவிட்டால் தான் நிலங்களை இழந்துவிடுவதாகவும் சொல்ல ஐயருமிசைந்து அவன்காட்டியஇடங்கள்தோறும் ஜலத்தைக்காட்ட உடனே அரசன் ஸபையோர் நிலங்கள் யாவற்றையும் மூந்நூறு பிராமணர்களிடம் ஒப்புவித்துவிட்டு அகன்றார்கள். காட்டிய இடந்தோறும் ஜலம் மேலே வழிந்து பெருகியதால் வடமொழியில் பிரகத்தீர்த்தமெனவும் தமிழில் திருப்பெருந்துறை எனவும் இவ்வூருக்குப் பெயர் வந்தது. உடனே அந்தணர்கள் தாங்கள் மீண்டும் அடைந்த நிலங்களை மூந்நூத்திஒருபங்கு செய்து அதில் ஒருபங்கை அந்தணர்பெருமானுக்குக்கொடுத்து அதில் ஒரு கிரகத்தையுமவர்க்குக் கட்டிக்கொடுக்க அவர் அதில் கொஞ்சகாலம் வஸித்தார். அந்த இடமானது வெள்ளாற்றுக்குத் தென்கரையில் காலாக்கினி ருத்திரதீர்த்தத்துக்கு வடக்கிலுள்ள தற்காலமும் மூந்நூத்திஒருவன் தோப்பென வழங்குகிற இடமேயாகும். இது காலகம் ரோட்டுக்குப் பக்கத்திலுள்ளது. இவ்வூருக்குச் சமீபத்திலுள்ள மின்னுமொழி, மணலூர் வகையரு கிராமங்களில் மேற்சொல்லியமந்திரியின் ஜாதியார்களின்னும் வஸிக்கிறார்கள். கிழவனைநம்பிய பிராமணர்கள் அன்றுமுதல் நம்பியாரென அழைக்கப்பட்டார்களாம்.

ஆத்மநாதர் உபாத்தியாயராக வந்தது

மேற்சொல்லிய கிழவரே மூந்நூறு பிராமணர்களால் சாப்பாடுகொடுக்கப்பெற்று அவர்கள வீட்டுப் பிள்ளைகளுக்கு வேத அத்தியயனம் சாஸ்திரம் முதலிய ஸகல வித்தைகளையும் புகட்டி வந்தார். இதற்காக வித்யாவிநாயகரை (பள்ளிக்கூடப் பிள்ளையார்) முதலில் ஸ்தாபித்தார். இந்த விநாயகர் முன்சொன்னபடி இப்பொழுதும் காணப்படுவார். இந்த விநாயகருக்கடுத்த மேதன் புரத்திலேயே வித்தியாசாலை மண்டபமிருந்து ஸமீபத்தில் அழிந்துபோன சின்னங்கள் தெரியும். பிள்ளைகள் தூக்குச்சுவடிகளுடன் பிம்பங்களில் காணப்படுவது கீழே கிடப்பதையும் பார்க்கலாம். இவ்விதம் வித்தை சொல்லி வைத்தவர் ஒருநாள் சரத்கால சந்திரனோடு கூடிய ஓர் இரவில் கண்கட்டி பிள்ளைகளுடன் தாமும் விளையாடும்பொழுது பிள்ளைகள் கண்களை கட்டிவிட்டுத் தான் மறைந்து விட்டார். கொஞ்சநேரம் கழித்தவுடன் இவரை எங்குதேடியும் அகப்படவில்லை. பிறகு எல்லோருக்கும் சொற்பனத்தில் எழுந்தருளித் தானே ஆத்மநாதரென்றும் பிராமணர்களைப் பாதுகாப்பதற்காக பிராமண வடிவமெடுத்து வந்தவரென்றும் சொல்லி அவரவர்கள் வீடுகளில் தனக்கு இட்ட புழுங்கலரிசி, பாகற்காய், முளைக்கீரை இவைகளையே தனக்கு பிரதிதினமும் நிவேதனம்

செய்யவேண்டுமென்றும் கட்டளையிட்டார். அன்றுமுதல் முந்நூறு மறையவர்களும் பூஜையைப் பங்குசெய்துகொண்டு ஸந்ததி பாரம்பரையாய்ப் பூஜைசெய்து வருகிறார்கள். ஸ்வாமிக்கு அன்றுமுதல் புழுங்கலரிசியும் பாகற்காயும் முளைக்கீரையும் ஒவ்வொருநாளும் நிவேதனமுண்டு. சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமத்தார்கள் அவைகளிலும் மற்ற காய்கறிகளிலும் முதல்முதலில் உண்டாகிறவைகளை கோவிலுக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு தாங்கள் உபயோகிப்பார்கள்.

வாதவூரடிகள் திருப்பெருந்துறை வந்து உபதேசம் பெறல்.

வெகுகாலத்திற்குமுன் மதுரையில் அரசுபுரிந்த அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் மதுரைக்கு ஸமீபம் வாதவூரில் சம்பூபாதாசிருதர் என்ற அமாத்தியகுல பிராமணர் ஒருவர் இருந்தார். அவர்மனைவி சிவஞானவதியார். இவர்களுக்கு வாதவூரார் என்ற பிள்ளைபிறந்து 16-வயதுக்குள் எல்லா வித்தைகளிலும் வல்லவராக விளங்குவதை அரசன் அறிந்துவரவழைத்துத்தனது பிரதான மந்திரியாக்கித் தென்னவன் பிரமராயன் என்ற பட்டப்பெயரும் கொடுத்தான்.

அரசனுக்கு, குதிரைப்படை குறைவாக இருந்ததால் கீழசமுத்திரக்கரையில் நல்ல குதிரை

கள் வருவதைக் கேள்வியுற்ற அரசன் 12 கோடி பசும்பொன்னை வாதவூரடிகளிடம் கொடுத்து குதிரைகள் வாங்கிவரும்படி ஏற்பாடு செய்தான். உடனே வாதவூரர் ஏராளமான ஸைன்னியத்துடனும் பொருளுடனும் அநேகம் ஊர்களைத் தாண்டி காளையம்பதியாகிய காளையார் கோவிலில் ஓர்நாள் தங்கி அங்கு சுவாமி தர்சனம் செய்துகொண்டு பிறகு வரும் மார்க்கத்தில் தெய்வவசமாய் திருப்பெருந்துறையை அடைந்து நாராயண தீர்த்தத்துக்கு வடகரையில் ஆதிகேசவப்பெருமாள் ஆலயத்திற்குத்தெற்கில் தங்கினார். இவர் வந்ததைக் கேட்ட ரௌஷாயணர் புத்திரராகிய சிவஸ்வாமியாரால்உபசரிக்கப்பட்டு இந்தஆதிகைலாஸ க்ஷேத்திர மகாத்மத்தையும் சொல்லக்கேட்டார். உடனே இவர்மனம் ஸ்ரீ ஆத்மநாதக்கடவுளிடம் பதிந்துவிட்டதால் குதிரைகள் வாங்கவேண்டிய காரியத்தை மறந்து சிவவேடந்தரித்து ஸ்வாமி ஸன்னிதியிலேயேதங்கிவிட்டார். தான்கொண்டுவந்தபொருள்களையெல்லாம் ஆலயத்திருப்பணிக்கும் பிரமணர்களுக்கும் கொடுத்துச் செலவு செய்துவிட்டார். இவருடன் வந்தவர்களனைவரும் இவர் பித்தர், பேயர், பிசாசர்களுடைய நடத்தையுள்ளவராக ஆய்விட்டாரென எண்ணித்திரும்பி மதுரைபோய் அரசனுக்கு அறிவித்தார்கள். இங்கு திருப்பெருந்துறையில் ஆனிமீ சுக்லபக்ஷம் ஸப்தமிதிதி உத்திர நக்ஷத்திரம் கூடியசுபதினம் இரவு பிராம்ம முகூர்த்தத்தில் வாதவூரர் திடீரென எழுந்து ஆலயத்துக்குச்செல்ல ஆலயக்கதவுகள் தானே திறந்து

கொள்ளவும் அக்கினிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராக்ஷமணிந்து ஆத்மநாதரை வலமாக உள்வடபிராகாரத்தில் குருந்த விருக்ஷத்தினடியிற் சென்றவுடன் ஸ்ரீ ஆத்மநாதக்கடவுள் குருந்த விருக்ஷத்தில் அரியகாக்ஷிகளைக்காட்டி அதனடியில் ப்ரத்யக்ஷமூர்த்தியாக எழுந்தருளி ஸ்ரீ வாதவூரடிகளுக்கு தீக்ஷாவிதிகளையெல்லாம் செய்து உபதேசம் செய்தருளினர். வாதவூரடிகள் ஆநந்தக்கடலில் ஆழ்ந்து இவ்வூரிலிருக்கையில் அரிமர்த்தனபாண்டியனிடமிருந்து இவரை அங்கு அழைத்துப்போக தூதர்கள் வரவே வாதவூரடிகள் ஈசுவரனைப்பிரார்த்திக்கஆத்மநாதக்கடவுள் ஆவணிமூலம் தான் குதிரைகளுடன் மதுரை வருவதாகச் சொல்லித் தேறுதல்சொல்லியனுப்பினர்.

உடனே வாதவூரடிகள் மதுரைவந்து ஆவணி மூலத்தன்று குதிரைகள் வந்துவிடுமென்று அரசனுக்குத் தெரிவித்து இருந்தார்.

நரி பரியாக்கிய திருவிளையாடல்.

கருணைக்கடலாகிய ஸ்ரீ ஆத்மநாதக் கடவுள் வாதவூரடிகளைப் பாதுகாக்கவெண்ணி திருப்பெருந்துறைக்கு ஸமீபமாகவுள்ள நரிக்குடியென்னுமூரிலிருந்த நரிகளை யெல்லாம் குதிரைகளாக ஆக்கி அவைகளைத் தன் கணங்களைக் கொண்டு நடத்தச் செய்து தான் நான்கு வேதங்கள் வகையறுவை

அசுவமாக்கி அழகிய குதிரை வியாபாரியாக அதி லமர்ந்து எல்லாக்குதிரைகளுடனும் மதுரை வந்து அரசனுக்குக்காட்டி அவைகளை சாஸ்திரப்படி நடத்தவே அரசன் அழகுள்ள குதிரைகளைக்கண்டு தான்கொடுத்தபொருள் ஒருகுதிரைக்குக்கூடக் காணாது என எண்ணி அதிக திருப்தியடைந்து குதிரைவியாபாரிக்கு ஏராளமான வெகுமதியளித்துக்குதிரைகளை தனக்குமுன்னிருந்த குதிரைகளுடன் கொண்டுபோய்க் கட்டுவித்தான். வெகுமதி பெற்ற வியாபாரி திருப்பெருந்துறை வந்தவிட்டார் அன்'ரவேவந்தகுதிரைகளனைத்தும் நரியாக மாறி அங்கு முன்இருந்த குதிரைகளையுந்தின்று விட்டு பெருத்த ஊளைச்சத்தத்துடன் லாயங்களை விட்டுக் காடுசென்றன.

சுந்தரமூர்த்தி பிட்டுக்கு மண்சுமத்தலும் வாதவூரடிகள்மந்திரி வேலையை விடுதலும்.

குதிரைகளெல்லாம் நரிகளாக மாறி காடுசென்றதைக் கண்ட அரிமர்த்தன பாண்டியன் அடங்காத கோபங்கொண்டு இவைகளுக்குக்காரணம் வாதவூரடிகளேயென்று அவரைக் கொடுந்தண்டனைகளுக்குட்படுத்தினன். உடனே கடவுள் வைகையில்

வெள்ளத்தை உண்டுபண்ணவே வெள்ளத்துக்கு கரை போடுவதற்கு வீட்டுக்கு ஒரு கூலியாள்வரக் கட்டளையிட வந்தி என்றபிட்டு விற்பவளுக்கு சுந்தரமூர்த்தி ஆளாகவந்து உடைப்படைக்குங்காலம் பாண்டியன் பிரம்பாலடிபட்டு உடைப்படைக்க வெள்ளம் அடைபட்டுப்போகவும் ஐயன் பட்ட அடியும் அரசன் முதல் ஒவ்வொருவர்மீதும் அடி விழுந்ததும் அரசன் அறிவுவந்து கடவுள் உத்திரவுப்படி வாதவூரடிகளை தண்டனையினின்றும் நீக்கி மன்னிப்பும் கேட்க அவரும் வேலையை விட்டு விட்டுத் திரும்பவும் திருப்பெருந்துறைக்கு வந்து சேர்ந்தார். அங்கு தங்கி ஈசன்பேரில் இனிய பாடல்களைப்பாட மாணிக்கவாசகன் என்ற பெயரையும்அடைந்தார். திருவாசகம், திருக்கோவையார் இவைகள் இவர் பாடியதே

மாணிக்கவாசகர் தில்லையில் ஐக்கியமானது.

திருப்பெருந்துறையைவிட்டு மாணிக்கவாசகர் உத்தரகோசமங்கை முதலிய பல க்ஷேத்திரங்களுக்கும்போய் கடைசியாய் தில்லைவனமடைந்து பிறகு சபாநாதர் கட்டளைப்படி புத்தரை வாதில் வென்று புத்தஅரசன் மகள் ஊமைப்பெண்ணைப் பேசுவித்து சைவமதத்தை ஸ்தாபித்து திருவாசகத்தை அரங்கேற்றி ஆனிமாதம் மகநக்ஷத்திரத்தில் ஈசனுடைய ஜோதியில் கலந்துவிட்டனர்.

குருந்தமூலர் மாணிக்கவாசகர் ஸ்தாபனங்கள்.

ஸ்ரீ மாணிக்க வாசகர் ஜோதியில் கலந்துவிட்டதைக்கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியனும் சுபதேவ சோழனும் தில்லைசென்று ஸன்னிதானத்தில் வருத்தமடையவே கடவுள் ஆக்ஞைப்படி அவர்களிருவரும் திருப்பெருந்துறை வந்து அங்கு ஸ்ரீ ஆத்மநாதர் உத்திரவுப்படி மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்த குருந்த விருக்ஷம் காணப்பட்ட இடத்தில் சிலாரூபமான குருந்த விருக்ஷத்தடியில் ஸ்ரீ ஆத்மநாதர் உருவமும் மாணிக்கவாசகர் அருள்மூலஸ்தானமுங்கூடிய ஒரு பிம்பத்தையமைத்து அவர்கள் அப்பிம்பத்தை பிரதிஷ்டை செய்தார்களெனச் சொல்லப் படுவதோடு இந்த பிம்பத்தினடியில் காணப்படும் உருவம், ஸ்வாமி, அம்பாள் குருந்தமூலம், இம்மூவரையும் பூஜைசெய்யத்தகுந்த அக்னிவேசியர் உருவமென்றும் சொல்லுகிறார்கள். ஸ்வாமி விசுவகர்மாவைக் கொண்டு ஸ்ரீ மாணிக்கவாசகர் உத்ஸவமூர்த்தி ஒன்றைச்செய்வித்து அதை யோகாம்பிகை ஸன்னிதிக்கு எதிரில் ஸ்தாபனம் செய்யும்படிக்கு கட்டளையிட்டுக்கொடுக்கவே இரு அரசர்களும் அக்கட்டளையை நிறைவேற்றி சந்தோஷித்தார்கள். அன்றுமுதல் ஆனி, மார்கழி இவ்விரு உத்ஸவங்களையும் பாண்டியனும், சோழனும் முறையே பேருக்கு ஓர் உத்ஸவமாகக் கடவுள் ஆக்ஞைப்படி

17063

நடத்தலானார்கள். ஈசுவரன் தனக்கு முக்கிய பக்தரான ஸ்ரீ மாணிக்கவாசகரும் தானும் ஒன்றே என்பதை எல்லோருமுணரவேண்டியதின் பொருட்டு தனக்குள்ள விருதைப வாகனமுதலியவும் கொடுத்தும் தனக்கு ஆராதனைகள் ஆனவுடன் ஸ்ரீ சிவயோகாம்பிகைக்கும் ஸ்ரீ மாணிக்கவாசகருக்கும் ஏககாலத்தில் ஆராதனைகள் நடத்தவும் தன்னுடைய நிர்மால்யங்களையே ஸ்ரீ மாணிக்கவாசகருக்கு உபயோகப்படுத்தும்படிக்கும் கட்டளைசெய்தருளினார். ஸ்ரீ மாணிக்கவாசகர் பாக்கியமே பாக்கியம்.

Q23:38,2119;5

ஸ்ரீ மாணிக்கவாசகர் திருப்பணி செய்த பொழுது ஜீர்ணமான பணிகளையும் புதிக்கியதாகவும் பீடரூபிகளான ஸ்ரீ ஆத்மநாதக்கடவுளும் ஸ்ரீ சிவயோகாம்பிகையும் கலியுகமானிடர்களின் கண்களுக்குப் புலப்படாவண்ணம் ஆத்மநாதக் கடவுளுக்கு ஸ்வர்ணக்குவளையையும் ஸ்ரீ சிவயோகாம்பிகைக்கு முன் பல்கணிக்கதவையும் வைத்து எல்லோரையும் தரிசிக்கும்படி செய்து கும்பாபிஷேகம் செய்தனரென்றும் சொல்லப்படுகிறது.

ஆலயத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகளுக்கு உத்ஸவம் தொடங்கிய நாள்முதல் இன்றுவரை உத்ஸவங்கள்தோறும் கடைசிநாள் ஆனி உத்திரத்தன்றும், மார்கழி திருவாதிரையன்றும், அவருக்கு ஆதியில் கடவுள் உபதேசம் செய்த இடமாகிய குருந்தமூல ஸன்னிதானத்தில் பிராம்ம

முகூர்த்தத்தில் உபதேசக்காக்ஷி நடைபெற்று வருகின்றன.

நந்திதேவரே மாணிக்கவாசகராக வந்தாரெனச் சொல்லப்படுவதால் ஆலயத்துக்குள்ளே போகும்பொழுதும் பிறகு வெளியேவரும்பொழுதும் அவரை யாவரும் தரிசிப்பது வழக்கம்.

3 ஆலயம்.

தெற்கு ஊரிலுள்ள ஸ்ரீ ஆத்மநாதக் கடவுளின் ஆலயம் ஊர்மத்தியிலுள்ளது தெற்குப் பார்த்த கோபுரவாயிலையுடையது. கோயில் மதிள்களின் புறங்களில் பிராமணர்கள் வீடுகளமைந்த மடவளாவீதிகளும், மேற்படி மடவளா வடகிழக்கு மூலையில் கட்டளை மடமும், இவைகளையெல்லாம் சுற்றி நாற்புறத்தும் பலஜாதியார்களுடைய வீடுகளமைந்த தோரேடு வீதிகளும், பக்கங்களிற்பல வீடுகளும், தெற்குவீதியில் திருவாவடுதுறை ஆதீன கர்த்தாராயிருந்த ஸ்ரீ வேலப்ப தேசிகரவர்கள் அடக்கமான இடமும், இத் தெற்குவீதியிலும் மேலவீதியிலும்நாட்டுக்கோட்டைச்செட்டிப்பிள்ளைகளின் அன்ன சத்திரங்களும் வேத, சாஸ்திர, தேவாரப்பாடசாலைகளும், குருபூசை மடமும் இருக்கின்றன இவ்வூரில் மேற்படி செட்டிப்பிள்ளைகளின் பசுமடமும்நந்தனவனமும்இருக்கின்றன

போலீஸ்டேஷனும், தாலுகாபோர்டு தர்ம ஆஸ்பத்திரியும், சிறுவர்களும், சிறுமிகளும் படிக்கத் தனித்தனி பள்ளிக்கூடங்களும், தபாலாபீசுகளும் கடைகளும் காணப்படும். கண்வாய்க்கரைக்கு கிழக்கில் செட்டிப் பிள்ளைகளால் கட்டப்பட்ட மகாதேவசுவாமிகள் சமாதுக்கட்டிடமும் அதன் கிழக்கில் அதைச்சேர்ந்த தர்ம தடாகமும் இருக்கின்றன.

ஆலயம்மிக்க பழமையானது கோபுர வாயிலுக்கு முன் வெகு விசித்திரமான பெரிய மண்டபம் காணப்படும் இதில் மத்தியில் அணியொட்டிக் கால்களமைத்த விசாலமான பத்திகள் பார்க்கவெகு அலங்காரமாக விருக்கும். இம்மண்டபபாக் கல்லுகளின் ஓரங்களில் கொடுங்கைகளென்று சொல்லப்படுவன பார்க்கத்தகுந்தவை. இம்மண்டபத்தின் தாழ்ந்த மத்தியபாகத்தில் இருஸ்தம்பங்களில் வடக்குமுகமாகஇருக்கும் இருசிலைகளும் அகோரவீர பத்திரரென்றும், ரணவீரபத்திரரென்றும் சொல்லப்படும். இவை கெம்பீரமானபார்வையோடு அழகிய வேலைப்பாடுகள் உள்ளன. இந்தமத்தியபாகத்தில் தெற்குநோக்கியிருக்கும் இருஸ்தம்பங்களிலுள்ள பிம்பங்களின் மேலுள்ள விட்டத்தின் மேற்குபாகத்தில் ஹேரம்ப கணபதியின் சிறிய உருவம்காணப்படும். இம்மண்டபமுன்புறம் அதாவது தென்புறஸ்தம்பங்களில் நரஸிம்மம், ஊர்த்த தாண்டவம், ஸ்ரீ வெங்கடேசன் முதலிய பலவித உருவங்களும் அழகாய் அமைக்கப்பட்டிருக்கின்

றன. இம்மண்டபத்தின் மேற்குப்பாக மேடையில் ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகளின் திருமூலஸ்தானம் கிழக்குநோக்கியிருக்கிறது. இம்மூலஸ்தானம் ஆதியில் வடக்கூரில் நாராயணதீர்த்தம் தொண்டர்குழி இவைகளுக்கு வடக்கிலும் ஆதிகேசவப்பெருமாள் ஆலயத்திற்கு தெற்கிலுமுள்ள தற்காலமும் மாணிக்கவாசகன் தோப்பென வழங்கும் தென்னந்தோப்பில் மாணிக்கவாசகர் ஆதியில் வந்து தங்கிய இடத்திலிருந்ததெனவும் பின்னர் இப்போது வெகுகாலத்திற்கு முன்பே இம்மண்டபத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்டதெனவும் சொல்லத்தெரிகிறது. இம்மாணிக்கவாசகர் ஸன்னிதிக்கு தென்கிழக்கிலுள்ள ஸ்தம்பத்தில் உச்சிஷ்ட கணபதி அழகாய் விளங்குவார். இம்மண்டபத்தை மாணிக்கவாசகர் மூலஸ்தானமிருப்பதால் மாணிக்கவாசகர் மண்டபமெனவும், பெரியமண்டபமெனவும்வழக்கமாய்ச் சொல்லுவார்கள். இரகுநாதபூபாலன் மண்டபமென்பது இதன் உண்மைப்பெயர். ரகுநாதபூபாலன் என்ற அரசனால் இம்மண்டபம் ஆதியில்கட்டப்பட்டிருத்தலால் இப்பெயரிடப்பட்டிருக்கிறது. இவனது உருவமும் "ரகுநாதபூபாலன் மண்டபம்" என்ற சாஸநமும் இம்மண்டபம் கீழ்பாக உயர்ந்த மேடைகளிரண்டில் வடபக்கம்மேடையில் வடக்குமுதல் இரண்டாவது வரிசையில் கிழக்குமுதல் 3-வது தூணில் காணப்படும். இவ்வரசன் அரண்தாங்கியில் ரெகுநாத வணங்காமுடித் தொண்டமான் என்ற பெயருடன் சிற்றரசு புரிந்தவனெனச் சொல்லஇடமுண்டு. இந்தஅரசனால் இவ்வாலயத்

திற்கு ஸர்வமானியம் கொடுத்திருப்பதைக்காட்டக் கூடிய சிலாசாஸனம் தேவஸபையில் மேலச்சுவற்றில் உள்புறத்திற்காணப்படும். இம்மண்டபம் தாழ்ந்த நடுப்பாகம் வடக்குமேல்புறம் ஸ்தம்பத்தில் "திருப்பணி வேதவனபண்டாரம்" என்ற எழுத்துக்களுமஉருவும் கீழ்புரம்ஸ்தம்பத்தில் திருப்பணி ஆறுமுகபண்டாரம் என்றஎழுத்துக்களும் உருவும் காணப்படுவதால் ஷை பண்டாரத்தார்கள் காலத்தில் இம்மண்டபம் திருப்பணி செய்யப்பட்டிருக்கலாம்.

ஆலயமானது ஷடாதாரம்போல் ஷட்ஸபைகளுடனும் நவத்வாரங்களுடனும் விளங்குகின்றது வெளிக்கோபுரமானது பஞ்சாக்ஷரத்தின் பொருளாய் ஐந்து நிலைகளோடு விளங்கும். கோயிலுள் மூன்றுபிராகாரங்கள் காணப்படும். வெளிப்பிராகாரமென்பது 3-வது பிராகாரம். பெரியபிராகாரமென்றும் சொல்வார். நடுப்பிராகாரமென்பது இரண்டாவது பிராகாரம், உள்பிராகாரமென்பது 1-வது பிராகாரம்.

வெளிப்பிராகாரமுதல் ஒன்றன்பின் ஒன்றாய் ஸ்ரீ ஆத்மநாதக்கடவுள் கர்ப்பக்கிருகம்வரை ஸன்னிதிக்கு எதிரில் 6 முக்கிய இடங்கள் அல்லது மண்டபங்களைப்பார்க்கலாம். அவைகளுக்குத்தான் ஸபைகளென்று பெயர்.

1. கனகசபை இது ஸன்னிதிக்கு எதிரில் 3வது பிராகாரத்தில் வெளிக்கோபுரத்துக்கு வடக்

கிலுள்ளது இம்மண்டபத்தில் ஸ்ரீ ஆத்மநாதக்கடவுள் நரியைப்பரியாக்க அசுவாரூடராய் எழுந்தருளிய காக்ஷிகொடுக்கும் காரணம்பற்றி குதிரைஸ்வாமி மண்டபமெனவும் இதில் ஜபம்செய்வோர்கள் பஞ்சாக்ஷரம் ஜெபித்தலின் பலனையடைவாரென்று சொல்லப்படுவதால் பஞ்சாக்ஷரமண்டபமெனவும் வழங்கப்படும். இச்சபையின் சீழ்பாகம் பத்தியில் பாக்கலின் கீழுள்ள நாற்புற உத்திரங்களினும் அடியில்கண்ட பாட்டுகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

1. "இதம் வெகுவாகும் கனகசபையிலெழுதுஞ்
சித்திரப்
பதம் வெகுவாகும் புவனஞ்செய்தானிந்தப்
பாக்கலெலாந்
திதம் வெகுவாகச்செய்தான் வந்தவிக்கினந்
தீர்த்துச்செய்தான்
விதம் வெகுவாகச் செய்தானெங்கள்
சொக்க விநாயகனே."

2. "கோடிக்கை மற்றக்கை செய்யவங் கோமளக்
கோதையர்க
ளாடிக்கை காட்டுமட மாதர் நாரியராயிழை
யார்
பாடிக்கை காட்டுங் கனகசபைதன்னிற் பாக்
கலெல்லாம்
வேடிக்கையாகச் செய்தானெங்கள் கோபுர
வேலவனே."

3. "திநிக்குஞ்சகாத்தமிங் கொன்றரையாயிரஞ்
செல்லருநான்
குதிக்கும்பிலவத்திற் பங்குனிமாதத்தி
லொன்பதுசீர்
பதிக்கும் கனகசபை மண்டபந்தன்னிற்
பாக்கலெல்லாம்
மதிக்கும்படி முகித்தான் யெங்கள் மாணிக்க
வாசகனே."

4. "தலஞ்சேர் பிலவவருடப்பங்குனி
தனில்
வலஞ்சேரு நற்சனிவாரத்து மூலமகி
மூட்டமிப்
பலஞ்சேரு நாளிற்கனகஸபைதன்னிற்
பாக்கலெல்லாம்
நலஞ்சேரவே முகித்தானெங்களாளுடை
நாயகனே."

5 "எண்காண் விசயவருடம் துவக்கி இதம்
பெறவே
தண்காண் பிலவவருடப் பங்குனிதனில்
நவமாம்
பண்காண் கனகசபை மண்டபந்தன்னில்
பாக்கலெல்லாம்
கண்காணவே முகித்தாள் யோகநாயகிக்
காரிகையே."

மேற்சொல்லிய பாக்களினின்றும் இம்மண்

டபத்தில் பாக்கல் பழுதுபார்த்தகாலம் இற்றைக்கு சுமார் 320வருஷங்களுக்குமுன் எனநமக்குத்தெரிவிக்கிறது. யாரால் என்பது தெரியவில்லை.

இம்மண்டபத்தின் நடுப்பாகம் கீழ்பாகம் உத்தரம் முதலியஇடங்களில் ஸ்ரீ ஆத்மநாதக்கடவுள் அந்தணராய் வந்து கீழ்நீர் காட்டியவைகள் உருவங்களோடு திகழும்.

இம்மண்டபம் நடுஸ்தம்பங்கள் நான்கில் மேல்புறம் வடபுறம் ஸ்தம்பத்தில் கடவுள் மேற்சொல்லியவாறு அசுவாரூட.ராகவும் அவருக்கு எதிரிலுள்ள ஸ்தம்பத்தில் ஸ்ரீ மாணிக்கவாசகருடைய உருவமும் கீழ்புறம் வடபுறம் ஸ்தம்பத்தில் வரதுங்க பாண்டியன் மகனை வத்ஸ பாண்டியன் அல்லது குமாரபாண்டியன் உருவமும் அதற்கு எதிரிலுள்ள ஸ்தம்பத்தில் ஷை பாண்டியன் மந்திரியும் குரும்பவேளாளர்களின் அதிபதியுமான லுண்டாக்கன் உருவமும் காணப்படும். இச்சபையில் உயரக் கிழக்குபாகத்தில் பஞ்சகலைகளும், தென்கிழக்கில் ஏகாதச மந்திரங்களும் 81 பதங்களும், வடமேற்கில் 51 வர்ணங்களும், மேற்கில் 224புவனங்களும், வடக்கில் 36 தத்துவங்களும் காணப்படும். கொடுங்கைகளை இச்சபையைச்சுற்றிலும் பார்க்கலாம்.

2. நடனசபை அல்லது நிருத்தஸபை இச்சபை 2வது அதாவது நடுப்பிராகாரத்தில் 2வது

கோபுரத்துக்கு வடக்கிலும் ஸன்னிதிக்கு எதிரிலு முள்ளது. இதில்பதஞ்சலி, வியாக்ரபாதர், இருவர் களும் ஆனந்தக்கூத்தாடியதால் இப்பெயர் வந்தது. இவ்விடத்தில் பதஞ்சலி, வியாக்ரபாதர் ஸ்ரீ மாணிக்கவாசகர் உருவங்களும் சங்கநிதி, பத்மநிதி இவைகளிரண்டையும் உருவங்களாய்க் காட்டிய விந்தையும் காணப்படும் இங்குநின்று தரிசிப் போர் எல்லா நிதியையும் அடைவார்களெனப் பொருள்படுமாறு இந்நிதிகளை இங்குகாட்டியதாகக் கொள்ளினும் கொள்ளலாம். இச்சபையில் தெற்கு ப்பக்கங்களில் மேல்புரமுள்ள இருதூண்களில் ஈசுவரனும் அம்மையும் கிராதகன் அதாவது வேடன் வேடச்சிகளான அவஸரமும் கீழ்புரமுள் ள இருதூண்களில் சண்டாள அவஸரமும் மிக்க அழகுடன் காணப்படும்.

பதஞ்சலி வியாக்ரபாதர் இன்னும்பல முனி வர்கள் ஈசன் திருநடனத்தைக் காண எண்ணி இங்குவந்து ஆத்மநாதக் கடவுளைத் தரிசிக்கவே கடவுள் இக்ஷேத்திரத்தில்தான் உருவமின்றிப் பிரகாசிப்பதாயும் ஆதலால் நிருத்தம் இங்கு இய லாதென்றும் அக்காக்ஷியை நடனஸ்தானமாகிய தில்லையில் தந்தருளுவதாயும வாக்களித்தமைபற்றி தில்லைசென்று நடனதரிசனம் செய்ததாகச் சொல் லப்படுகிறது.

3. தேவஸபை இச்சபை உள்பிராகாரத்துக் குள்ளடங்கி ஸ்வாமிஸன்னிதிக்கு எதிரில்உள்ளது

இம்மண்டபம் சுந்தர பாண்டியன் புதுப்பித்தா னென்றும் அதனுல் சுந்தரபாண்டியன் மண்டப மெனவும் பெயர்வழங்குகிறது எனவும் சொல்வார் கள். இங்குதரிசிப்போர்நிற்குமிடம் சூரபத்மனுல் உபத்திரவ முண்டான தேவர்கள் இங்கு வந்து தங்கியதால் தேவஸபையெனப் பெயர்வந்ததாகச் சொல்லப்படுகிறது.

4. ஸத்ஸபை இதை அமுதுமண்டபமெனச் சொல்லப்படும். இவடத்தில் ஸன்னிதிக்கு எதிரி லுள்ள விசாலமான மேடையில் ஸ்ரீ ஆத்மநாதக் கடவுளுக்கு கைபடாத நிவேதனம் ஏராளமாய் இடப்படும். இங்குபிராமணர்கள் நின்றுதரிசிக்கத் தக்கது.

5. சித்ஸபை இது அர்த்த மண்டபமாகும் பூஜிப்பவர்கள் பிரவேசிக்கத்தக்கது.

6. ஆனந்தஸபை இதுவே கர்ப்பக்கிரகம் இதுவே ஈசுவரன் வஸிக்குமிடம்.

இவ்விடத்தில் ஸர்வேசுவரனுன ஸ்ரீ' ஆத்ம நாதக்கடவுள் பீட ரூபமாய் விளங்கிக்கொண் டிருக்கிறுர். இவ்விடத்தில்நம்பியார்களாகியபூசகர் களைத்தவிற வேறுஒருவரும்செல்லலாகாது. நமது கண்களுக்குஈசுவரன் இலிங்கஸ்வரூபமாய் காணப் பட்டாலும் அங்கு இலிங்கமில்லை அங்கு இலிங்கமாகக்காணப்படுவது ஸ்வர்ணக்குவளையே

அக்குவளைக்குள்ளிருக்கும்விஷயம் ரகஸ்யம் என்பார் நாம்பார்க்க இயலாது. உள்மேற்குப் பிராகாரத்தில் வீரபத்திரருக்கு அருகில் வடபுரத்திலுள்ள ஸ்தம்பத்தில் மேலே ஸ்ரீ ராமபிரானுடைய அருமை உருவின் பாதத்தின்கீழ் ஸ்ரீ ஆஞ்சநேயக் கடவுள் காணப்படுவார். இவருக்கு பூஜா நைவேதனம் உண்டு.

இப்பிராகாரம் வடமேற்கு மூலையில் யோகாம்பிகை ஸன்னிதி இருக்கிறது. இதுவும் தெற்கு நோக்கிய ஸன்னிதியே ஸன்னிதியில்தெரியும் பல் கணிவாயிலின் வழியே வெளியிருந்தே தரிசனம் செய்யவேண்டும். ஆலயத்துள் போக இயலாது உள்ளே அம்பிகைஉருவமில்லை பீடமே. ஸ்வர்ணத் தகட்டிலமைந்ததெனவும் சொல்வார்கள். இதுவும் ரகஸ்யமே, இங்கும் நம்பியார்களே பூஜை. பசுமஞ்சள் அபிஷேகத்தில் அம்பிகைக்குப்பிரியம்அதிகம். சரீரத்தில் தோலைப்பற்றிய நோயுள்ளோர்கள் உப்பு, மிளகு முதலியவைகள் வாங்கி ஸன்னிதியில்கொட்டி ரோகநிவர்த்தியாகி ஸந்தோஷத்தையடைவார்கள். மக்களில்லாதார் இங்குவந்து தரிசித்து மக்கட்பேறு பெற்றோர்கள் அழகியதொட்டில்கள் கட்டுவார்கள். வளைகாப்பு கல்யாணம் நேர்ந்தபொழுதே முதலில் அம்பாளுக்கென்று வளைகளைத்தனியா யெடுத்துவைத்து அவைகளை ஸன்னிதியில் சேர்ப்பார்கள். பச்சையை பல்கணியிற் சாத்துவார்கள்.

ஸ்ரீ ஆத்மநாதர் ஆலயத்திற்கு வடக்கிலும் அம்பிகை ஆலயத்திற்கு கிழக்கிலும் உள்வடமேல் புறம் பிராகாரத்தில் முன்சொன்னபடி குருந்த மூலர் விளங்குவார்.

இந்தவிடத்து பிராகாரத்துள்ளிருக்கும் ஸபையின் விமானம் ஸ்வர்ணம் தீட்டப்பெற்றது. இப்பிராகாரம் வடகிழக்கு மூலையில் ஸ்ரீ நடராஜர் சிலாரூபமாய் தெற்குநோக்கி தரிசனந்தந்தருளு வார். தென்கிழக்கு மூலையில் வடக்குநோக்கி பால சுப்பிரமணியர் உத்ஸவமூர்த்தி எழுந்தருளியிருக் குமிடம்.

உள் தெற்கு பிராகாரத்தில் தென்மேற்கு மூலைக்கு ஸமீபத்தில் அம்பாள் ஸன்னிதிக்கு எதி ரில் வடக்குநோக்கி முன்சொன்ன ஸ்ரீ மாணிக்க வாசகர் உத்ஸவவிக்கிரகம் திவ்யமங்களமாய்ப் பிர காசிக்கும்.

3வது பிராகாரம் கனகஸபைக்கு மேற்கில் புது மாணிக்கவாசகஸ்வாமிகோயில் மூலஸ்தானம் கி. பி. 1879ல் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட் டதற்கு இல்வாலயத்தில் கல்வெட்டு முன்புறமண் டபத்தில் விட்டத்தில் தெற்குநோக்கிக் காணப் படும்.

3வது மேற்குபிராகாரத்தில் வடபாகத்தில் ஒருபெரியகம்பீரமான அழகியமண்டபம் காணப் படும். இதனைத்தியாகராஜ மண்டபமெனச்சொல்

வார்கள். இம்மண்டபவடக்குபாகத்தில்ஆதிநாளில் இராஜகோபாலப் பெருமாள் இருந்ததென இம் மண்டபத்துள்ளகல்வெட்டினுல் அறியலாம். நாளடைவில் இராஜகோபாலனை மறக்கநேர்ந்ததால் அப்பேர் சிதைந்து பிழைபட்டு தியாகராஜன் மண்டபமெனப்பெயர் மாறிவழங்கலாம். இம்மண்டபம் தென்பாகத்தில் மேற்கு நோக்கியிருக்கும் விநாயருக்கருகிலுள்ளஸ்தம்பத்தில் இம்மண்டபப் பெயர் அச்சுதபூபாலன் மண்டபமென்று எழுதப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். அச்சிலாசாஸனம் அடியில் வருமாறு காணப்படுகிறது.

"பிங்கல வருஷம் ஆனி மீ 20உ ஸ்ரீ இரங் தகலமெடுத்த வணங்காமுடி முத்துத்தொண்டமானரவர்கள் நாளையில் பிரதானி தர்மமுத்து வீரப்ப பிள்ளை நாளையில் அச்சுதபூபாலன் மண்டபம் திருப்பணி குறை சங்கிலி பாக்கல்லுமுதல் தெற்குப்பெரிய படங்கு ராஜகோபாலஸ்வாமி (தெரியவில்லை) விட்டவாசல் முத்துவிநாயகன் கோவில் கபாட (தெரியவில்லை) திருப்பணி மணியம் சிதம்பரம் பிள்ளை முத்துவிநாயகன் துணை".

இக்கல்வெட்டினின்றும் இவ்வச்சுதபூபாலன் மண்டபத்தில் ஓர்பாகத்தில் ராஜகோபாலஸ்வாமி எழுந்தருளியிருந்தா ரென்பதும் இம்மண்டபத் திருப்பணிக்குறைகளை மேற்சொல்லிய வணங்காமுடி முத்துத் தொண்டமானரால் முடிக்கப்பட்டதென்பதும் இம்மண்டபத்துள்ள விநாயகருக்கு

முத்துவிநாயகரேன்று பெயரென்பதும் நன்குபுலப் படுகிறது. இம்மண்டபம் வடபாகம் உயர்ந்தமே டையின் முன்பக்கத் தூண்களிரண்டில் ஒன்றில் மன்மதன் உருவமும் மற்றொரு தூணில் இரதி தேவியின் உருவமும் காணப்படும் இப்பாகத்து மண்டபத்தைச்சுற்றிலும் அழகியகொடுங்கைகளை ப்பார்க்கலாம். இவைகள்போன்ற வேலைப்பாடுகள் ஒருவிடத்திலும் இல்லையாதலால் ஆவுடையார் கோவில் திருப்பணி அடங்கலுக்கும்பிரீதி என்ற பழமொழி உண்டு. கற்சங்கிலிக்கோர்வைகளும் இம்மண்டபத்திற்காணப்படுவதோடு பலவிசித்திர மான வேலைகளும் நிறைந்திருக்கின்றன. இம்மண் டபத்தைக்கட்டிய அச்சுதபூபாலன் முன்னர்கூறிய இரகுநாதபூபாலனைப்போல் அறந்தாங்கியில்அரசு புரிந்தவனாக இருக்கலாம் "அச்சுதப்பதொண்ட மான் மண்டபம்" என்ற கல்வெட்டும்இம்மண்டப் உயர்ந்த பாகம் மேடைப்பீடத்தின்மேல்பார்க் கலாம்.

இம்மண்டபத்திலிருந்த இராஜகோபால ஸ்வாமி என்று நினைக்க ஹேதுவாக இற்றைக்குச் சுமார் 25வருடங்களுக்குமுன் இம்மண்டபத்துக் கருகில் பூமிக்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்ட பெருமாள் சிலாவிக்கிரகம் இம்மண்டபத்திற்கு வடமேற்கில் வைக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்க லாம். இம்மண்டபத்திலிருக்கும் மேற்சொல்லிய முத்து விநாயகரையும் இவருக்கு எதிரிலுள்ள மேற்குத்திருமதிலில் அடைத்தவாயிலுள்ளவிடத்

தில் ஆகாசஸ்வரூபமாயுள்ள மகாலிங்கமூர்த்தியை யும் பற்றியகதை ஒன்றுண்டு. அதாவது இக் கோயிற்காவல் முனீசுவரரான ஸ்ரீ மகாலிங்க மூர்த்தியுடையதென்றும் தினந்தோறும் அர்த்த யாமத்துக்குப்பிறகு கோயில் கதவுத்திறவுகோல் களையும் பிரஸாதமும் இந்த அடைபட்டவிடம் வாயிற்படியாயிருந்ததால் அவ்விடத்தில் வைத்து விட்டு நம்பியார் வடக்கூரிலிருந்த தனது கிருகத் திற்குச்செல்வது வழக்கமென்றும் ஓர்நாள் நம்பி யாரின் பெண் பிரஸவஉபத்திரவம் ஜாஸ்தியடை வதைக்கேட்ட நம்பியார் அவஸரத்தில் பிரஸாத மும் திறவுகோல்களும் வைக்காமல் வீட்டுக்குச் சென்றுவிட்டாரென்றும் இதைக்கண்ட முனீசு வரரும் பின்தொடர்ந்து சென்று அவர்பெண் ணின் கண்களிற்படவே அம்மகள் கஷ்டத்தை அடைந்தாளென்றும், உடனே அதனை அறிந்த மேற்சொல்லிய நம்பியார் மந்திரவாதியானதால் முனீசுவரரிடத்தில் கோபங்கொண்டு அவரைக் கடத்தில்ஸ்தாபனம்செய்து ஒன்பதுகூறுகளாக்கி இம்மண்டப விநாயகருக்குமுன் முன்னிருந்த வா யிற்படியை அடைக்கச்செய்து அந்த இடத்தில் ஒரு அம்சத்தையும் இவ்வூரிலும், இவ்வூரைச் சேர்ந்த பல கிராமங்களிலும் மற்ற அம்சங்களையும் ஸ்தாபனம் செய்து விட்டாரென்றும் இன்னும் இவரது உக்கிரத்தைக் குறைப்பதற்காக இவ்விநா யகரை மகாலிங்மூர்த்திக்கு எதிரில் வைக்கப்பட் டதென்றுமே. இவ்வாசல் அடைபட்ட காலமுதல் விட்டவாசல் என்றும் அவ்விடத்துள்ள ஆகாய

சுருபியான மகாலிங்க மூர்த்திக்கு விட்டவாசல் மகாலிங்க மூர்த்தியெனப் பெயரோடு வழங்கி வருகிறதெனச் சொல்வார்கள். இம்மூர்த்திக்கு பானகபூசை வெகு சிரத்தையோடு விமரிசையாய் அடிக்கடி நடக்கும்

வெளிப்பிராகாரம் அக்கினி தீர்த்தம் தென் கிழக்கு மூலையில் வெயிலுவந்தவிநாயகரென்று சொல்லப்படுகிற ஆதபகணபதியும் வேளிக்கோபுரம் வடபக்கம் கிழக்குபாகத்தில் உயர கோபுர வேலவனும் இருக்கிறார்கள். இவர்களைப்பற்றிய கதையுமொன்றுண்டு. இக்ஷேத்திரத்தில் ஈசுவரன் எல்லாச்சிறப்புகளையும் உற்சவத்தையும் தனது முக்கியபக்தனான மாணிக்கவாசகருக்கே கொடுத்துவிட்டதால் பிள்ளைகளாகிய விநாயகரும் சுப்பிரமணியரும் பிதாவிடத்தில் கோபங்கொண்டு குழந்தைகள் முறையை அனுசரித்து விநாயகர் வெயிலில் நின்றுமென்றும் குமாரக்கடவுள் கோபுரமேறிக்கீழேவிழ எறியதாயும் பின்னர் அவர்களது கோபத்தை சாந்தப்படுத்தியதாயும் சொல்லப்படுகிறது.

இப்பெரிய பிராகாரத்தில் ஆதபகணபதிக்குத்தெற்கில் காணப்படும்அறைக்குள் இரண்டு புதிய பெரிய எண்ணெக்கிணறுகளிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கான ஆடம் கொள்ளும். எண்ணெயை ஏராளமாய் அவைகளில் நிறப்பிவைத்து எடுத்துபயோகிப்பது வழக்கம்.

நடுப்பிராகாரமாகிய இரண்டாவது பிராகாரத்தில் இரண்டாவதுகோபுரத்துக்கு வடக்கிலும் முன்சொல்லிய நிருத்தஸபைக்குத் தெற்கிலும் ஓர் சிறியமண்டபம் கிழக்குமேற்கு நீளத்தில் காணப்படும். இம்மண்டபத்தில் இரண்டுவரிசைகள் தூண்கள் காணப்படும். அதில் வடக்கு வரிசையில் கிழக்குமுதல் 4வது தூணில் "ஸ்ரீமது இரணியகர்ப்பயாசி விஜயரகுநாத சேதுபதி அவர்கள்" என்ற கல்வெட்டுடன் உருவும் ஷை வரிசை 3வது தூணில் "ஸ்ரீமது விஜயரெகுநாதசேதுபதி அவர்கள் பிரதாநி முத்திருளப்ப பிள்ளை அவர்கள்" என்ற எழுத்துக்களும் உருவும் தெற்குவரிசை கிழக்குமுதல் 4வது தூணில் "ஸ்ரீமது விஜயரகுநாத சேதுபதி காததேவர்கள் தமயனார் முத்து வயிரவநாத தேவரவர்கள்" என்ற சாஸநமும் உருவும் மேற்படி வரிசை கிழக்குமுதல் 3வது தூணில மேற்குப்பக்கத்தில் "ரகுநாதத்தொண்டமான்" என்ற சாஸநமும் உருவும் தெற்குப்பக்கத்தில் "ரகுநாதத்தொண்டமானாரவர்கள் தானபதி வெங்கிட்டய்யன்" என்ற சாஸநமும் உருவுமிருக்கின்றன.

மேற்கண்ட முத்திருளப்ப பிள்ளை இற்றைக்குச்சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னிருந்தவரென நன்கு தெரிகிறது.

மேற்சொல்லிய தொண்டமானாரவர்கள் முழுப்பெயர் விஜயரகுநாதத் தொண்டமானாரவர்கள் என்றும் இவருக்கு பகதூர்என்றபட்டமும் உண்டு.

என்றும் இவர் புதுக்கோட்டைச்சீமையை கி. பி. 1807முதல் 1825வரையில் அரசுபுரிந்து வந்தவரென்றும் இவர் தானபதி வெங்கிட்டய்யன் என்றும் புதுக்கோட்டை இராஜாங்க விளக்கம் என்னும் ஒரு சிறிய புத்தகத்தினல் நன்கு விளங்குகிறது. ஆகையாலிம்மண்டபம நூறுவருஷங்களுக்குமுன் இராமநாதபுரம்சேதுபதி அவர்களும் புதுக்கோட்டைத் தொண்டமானரவர்களும் சேர்ந்து கட்டியிருக்கவேண்டுமென்று நினைக்கவேண்டியிருக்கிறது. புதுக்கோட்டைத், தொண்டமானரவர்கள் நித்தியக்கட்டளையும் உத்ஸவத்தில் மண்டகப்படியும் இவ்வாலயத்தில் நடந்து வருகிறது.

இவ்வாலயத்தில்காணப்படும் முன்சொல்லிய ஆறு ஸபைகளும் ஸ்ரீ ஆத்மநாதக்கடவுள், யோகாம்பிகை ஆலயங்களும் திருமதில்களும் தவிரயற்ற இடங்கள் திறந்த வெளியாயிருந்தவைகளை நாளடைவில் சிலநூற்ருண்டுகளுக்குமுன் துவக்கி பக்திமான்களின் பொருளுதவியால் பணிகள் செய்யப்பட்டிருக்கவேண்டுமெனநினைக்க இடமிருக்கிறது. மேற்சொல்கிய ஸபைகளைப் பார்க்குமிடத்து அவைகள் மட்டும் மிக்கபழமையானவைகளாகவும் தனித்தனி வேலைப்பாடுகளமைந்தனவாகவும் காணப்படுகின்றன.

உள்பிராகாரத்தில் பிரதக்ஷணம் செய்யுமிடங்களில் காணப்படும் பலஸ்தம்பங்களும் அவைகளின்மேலுள்ள பாக்கல்களும் பழமையானதல்ல

வென்பதைக் காட்டுகின்றன. மேற்கண்ட கீழ் புரம் பிராகாரத்தில் தெற்குவடக்கு வரிசையாய் ஸ்ரீ சுப்பிரமணியர் ஸன்னிதிமுதல் ஸ்ரீநடராஜர் ஸன்னிதி வரையிலுள்ள தூண்களில் ஒவ்வொன்றி லும் பிம்பமும் கல்வெட்டுகளும் காணலாம். இவை களில் "செலம்பாத்தான்சேருவைகாரன்" "காகத் துக்கோட்டை மெய்யப்பன் சேருவைகாரன்" மங்கநாதன் சேருவைகாரன்" "சந்திரன் சேரு வைகாரன்" "மதியுடச்சி சேர்வைகாரன்" "மௌ வாத்தான் சேர்வைகாரன்" என்ற எழுத்துக் களும் உருவங்களும் காணப்படுகின்றன இக் காகத்துக்கோட்டை என்ற கிராமமானது இவ் வாளுடையார் கோயிலுக்குக் கிழக்கில் 10-மைல் தூரத்திலுள்ளது. மேற்சொல்லிய பெயருள்ள வர்கள் அநேகர் அவ்வூரில் இன்னுமிருக்கிறார்கள் இவர்கள் தங்கள் மூன்னோர்களின் பெயரை வழக் கப்படி தரித்திருக்கலாம். ஜாதியில் இவர்கள் வன் னியர்களானலும் இவர்கள் பட்டப்பெயர் தற்கா லம் வைத்துக்கொண்டிருப்பதும் சேர்வைகாரர்க ளென்பதே. ஆகையால்இவைகளினின்றும் ஊகிப் பது என்னெனில் இவ்விடத்து சிறப்பாயிருந்த இடங்களை சிலநூற்றாண்டுகளுக்குள்பட்டு பலர் பொருள்கொண்டு திருப்பணி நடத்தப்பட்டிருக் குமென்பதுவே.

இத்தேவஸ்தானத்தில் சென்ற கர வருஷம் நடந்த கும்பாபிஷேகத்திற்கு முன் அதாவது 33 வருஷங்களுக்குமுன் செய்த முதல் பிராகாரத் திருப்பணியில் அம்மன்கோவில் குருந்தமூலர்ஸபை

இவைகள் முற்றிலும், ஸத்ஸடையில் சிலபாகமும் இடிக்கப்பட்டு நூதனமாய் பணி செய்யப்பட்டதில் அநேகம் கல்வெட்டுகள், போய்விட்டன. அவ்விதமானாலும் தற்போது பலவிடங்களிலும் ஏராளமான சாஸனங்கள் காணப்படும் அநேக சாஸனங்கள் பலவிடங்களிலும் வர்ணத்தினால் மூடப்பட்டு பார்க்கக்கூடாத நிலைமையிலிருக்கின்றன அவைகளிலநேகம் மிக்கப் பழமையானவைகளாகவேகாணப்படுகின்றன. எழுத்துகள் சிலதந்து போன பல சாஸனங்களிருக்கின்றன. இவற்றையெல்லாம் முற்றும்கண்டறிய எனக்கு ஆலை ஜாஸ்தியிருந்தாலும் போதுமான ஸாவகாசமும் உதவியுமில்லை என்று விசனிக்கவேண்டியிருக்கிறது.

இரண்டாவது தெற்குப் பிராகாரத்தையும் 1வது பிராகாரத்தையும் பிரிக்கும் நடுச்சுவற்றில் 2வது பிராகாரப்பக்கத்தில் ஸன்னிதிவாயிலுக்கு அருகில் கிழக்கில் வ்ணம் தீட்டப்பட்டிருந்ததை கொஞ்சம் அழித்துப்பார்க்க அடியிற்கண்ட எழுத்துகளின்பாகம் காணப்பட்டது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீ மேற்கு திக்கு மெலை ஸ்ரீ கொம
(தெரியவில்லை.)
எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீ குலசேகர
தேவற்குயாண்டுபதி (உதிர்ந்துபோயிருக்கிறது)
வது (உதிர்ந்துபோயிருக்கிறது.)
டெற்றபாசி (வர்ணத்தால் மூடப்பட்டிருக்கிறது).

இரண்டாவது இராஜாதிராஜன் சோழ ராஜ்யத்தை மூன்றாவது குலோத்துங்கனுக்குமுன் அரசுபுரிந்தவன் IIIவது குலோத்துங்கன் கி. பி. 1178ல் அரசுபுரந்தருளத் தொடங்கினனெனத் தெரிகிறது இவனுக்கு முன்னவனான மேற்சொல்லிய 2வது இராஜாதிராஜன், பராக்கிரம பாண்டியனும் சிங்களரும் ஒன்றாய்சேர்ந்து குலசேகரனுக்கு விரோதமாய்ச் செய்த போரில் குலசேகரனுக்கு ஸாதகமாய் மேற்படி இராஜாதிராஜன் உதவிபுரிந்ததாகத்தெரிகிறது. ஆகையாலிக்குலசேகரன் இற்றைக்குச் சுமார் 800வருஷங்களுக்கு முன்னிருந்தவனென்பது தெளிவு. இக்குலசேகர பாண்டியன் தன் ஆக்ஷியைச்சேர்ந்த இவ்வூர் ஆலயத்திற்கு ஏதாவது நடத்தியது முதலியவைகளைப்பற்றி அவனுடைய ஆக்ஷிக்காலம் பதினோராவது அல்லது பதினேழாவது ஆண்டில் இக்கல் வெட்டுகள், அதற்கு வெகுகாலத்துக்கு முன்னிருந்த இக்கல் சுவற்றில் வெட்டப்பட்டிருக்கலாம். இதைப்போலவே இந்த இரண்டாவது மேலப்பிராகாரம் கீழச்சுவற்றில் தென்புறம்அடிப்பாகத்தில் "...திருபுவனவீர தேவர்.........33வது..." என்ற கல்வெட்டுகளைப் பார்க்கலாம். இத்திருபுவன வீரதேவன் பின்வரும் வடக்கூர் ஆலயக்கல்வெட்டில் காணப்பட்டவனாகவே இருக்கவேண்டும். 2வது பிராகாரம் தென்கிழக்குமூலையில் "ஆண்டவிநாயகர்", தென்மேற்கு மூலையில் அன்னபூரணிசகிதமாக 'ஞானவிநாயகர்'

ஆக இருவர்களும் வடக்குநோக்கிக் காணப்படு வார்கள். 2வது கீழப்பிராகாரத்திலும் வெளி முன் மண்டபம் மேல்புறம மேடை வடபாகத்திலுள்ள ஸ்தம்பங்கள் ஒன்றிலும் நிருத்தன விநாயகர் என்று சொலலப்படும் பிரஸன்னவிநாயகர் காணப்படுவார் இந்த 2வது கீழப்பிராகாரத்தில் வெகுகாலத்திற்கு முன் ஸ்ரீ சுப்பிரமணியம் மூலஸ்தானம் அமைக்கப் பட்டிருந்ததாகத் தெரிகிறது.

ஸ்ரீ ஆத்மநாதக்கடவுள், ஸ்ரீ யோகாம்பிகை, ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ குருந்தமூலம் இவைகளின் தளத் தின் மேலுள்ள விமானங்கள் வெகு அழகான செம்பு ஓடுகள் போடப்பட்டு ஸ்வர்ணம் தீட்டி யஸ்தூபிகளுடன் பிரகாசிக்கின்றன.

தீபங்கள்

பததீபங்கள் 81 கனகஸபையிலும், மந்தரதீப ங்கள் 11 நடனஸபையிலும், புவனதீபங்கள் 224 தேவஸபையிலும், தத்துவதீபங்கள் 36 ஸத்ஸபை யிலும், வர்ணதீபங்கள் 51 சித்ஸபையிலும், கலா தீபங்கள் 5 ஆனந்தஸபையிலுமுள்ளன. இத்தீபங் கள் புரூரவச்சக்கரவர்த்தியால் ஏற்படுத்தப்பட்ட வைகளாகச்சொல்லப்படுகிறது. நக்ஷத்திரமாலை 27 நெய் தீபங்களடங்கியது ஸ்வாமிக்குப்பின்னுள்ளது. மேற்சொல்லியதீபங்களைத்தவிர அளவிறந்த தீபங் கள் தினந்தோறும் வெகுஅழகாய் வரிசை வரிசை யாய் ஒன்றன்பின் ஒன்றாய் பிரகாசிப்பதைப்பார் க்க வெகு ஆநந்தமாயிருக்கும்.

பூஜை :-கோயிலில் ஸன்னிதானத்தில் நந்தியாவது துவஜஸ்தம்பமாவது காணப்படா.

ஸ்ரீ ஆத்மநாதர், யோகாம்பிகை, குருந்த மூலர் இம்மூவருக்கும் வைதீகபூஜையே. முந்நூறு பிராமணர்களுடையபரம்பரையாராலேயேபூஜை நடந்துவருகின்றது.

சின்னமேளம் இக்கோயிலுக்குக் கிடையாது பெரிய மேளமும் உள்பிராகாரத்தில்போகக் கூடாது சங்கம், திருச்சின்னம், மணிகள்தான் இங்கு முழக்கலாம். பள்ளியறைபோல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தாலும் ஸ்வாமியும் அம்பாளும் பள்ளியறை போவதில்லை.

மற்ற மூர்த்திகளுக்குக் குருக்களே பூஜை செய்தாலும் ஸ்ரீ மாணிக்கவாசக உத்ஸவமூர்த்தியை உத்ஸவகாலங்களில் எழுந்தருளச் செய்வதும் சேர்க்கையில் வைப்பதும் உபதேசக்காக்ஷி நடத்துவதும் மேற்சொல்லிய முந்நூறு பிராமண பரம்பரையைச்சேர்ந்த நம்பியாரேயாகும்.

ஆலயத்தில் ஸரஸ்வதிமால் ஒன்று இருக்கிறது. இதற்கும் பூஜாநைவேதனமுண்டு இங்கு வைதீக ஆகம பூஜாவிதிகள் கற்பிக்கப்படுகின்றன.

பூஜாகாலங்கள் நித்தியமாய் முக்கியமாய் ஆறுகாலங்கள் 1. திருஅனந்தல் அதாவது உஷட் காலம், 2. தொண்டமான்காலம் அதாவது சிறு காலசந்தியாகும் இது புதுக்கோட்டை ஸமஸ்தா

ஜம் அரசரால் நடத்தப்படுவது, 3. காலசந்தி, 4. உச்சிக்காலம் இது இராமநாதபுரம் சேதுபதியவர்களால் நடத்தப்படுவது, 5. ஸாயரக்ஷை 6. அர்த்தஜாமம் தநுர்மாதத்தில் ஒருகாலம் கூட நடக்கும். திருஅனந்தல், காலசந்தி, ஸாயரக்ஷை, அர்த்தயாமம் இவைகள், பாண்டியசோழ அரசர்களால் கொடுக்கப்பட்டு கோவில் தர்மகர்த்தா அவர்கள் வசம் இருக்கும் பொருளுதவியால், நடத்தப்படுவதால் கோயிற்காலங்களென வழங்கும் மேற்சொல்லிய காலங்களைத்தவிற சிறுகாலங்களும் கட்டளைகளும் தினந்தோறும் உள்ளன அநேகம். உடையாத்தேவர் கட்டளையெனப்படும் சிவகங்கை ஜமீந்தாரவர்கள் கட்டளை, கோபாலக் கட்டளை எனப்படும், சிங்கவனம் ஜமீந்தாரவர்கள் கட்டளை. வன்னிச்சியார் கட்டளைஎனப்படும், பாளையவனம் ஜமீந்தாரவர்கள் கட்டளை, பச்சையப்பமுதலியாரவர்கள் கட்டளையென்ற கட்டளைகளும், பல அர்ச்சனைகளும் நடந்துவருவதாகத் தெரிகிறது. விசேஷகாலங்களிலும் உத்ஸவகாலங்களிலும் திட்டங்கள் ஜாஸ்தியாகும். தொண்டமான் கட்டளை, உச்சிக்காலக்கட்டளை, பச்சையப்பமுதலியார்கட்டளை இவைகளைத்தவிற பாக்கி எல்லாக்கட்டளைகளும் நீண்டகாலமாய் கோயிலார் மூலமாகவே நடைபெறுகின்றன.

தரிசனம் ஈசுவரனைக் காலையில் தரிசிப்போர் சிவஞானத்தையும், சாலோக பதவியையும், மத்தியானம் தரிசிப்போர் ஊக்கமான புத்தி

யையும், ஸாமீப பதவியையும், ஸாயங்காலம் தரிசிப்போர் ஐசுவரியத்தையும், முதிர்ந்த அறிவையும் ஸாரூபபதவியையும், அர்த்தயாமம் தரிசிப்போர் ஸர்வாபீஷ்டத்தையும், பிருமஞானத்தையும் மோக்ஷபதவியையும், அடைவார்களெனவும், இக்ஷேத்திரத்துக்கும் க்ஷேத்திரத்திலுள்ளவர்களுக்கும் அழிவில்லையென்றும், க்ஷேத்திரத்துக்கும் க்ஷேத்திரவாஸிகளுக்கும் எந்நன்மைசெய்தாலும் செய்தோர் மிக்கமேன்மை அடைவார்களென்றும் சொல்லப்படுகிறது.

நைவேதனம் தினம் ஒன்றுக்கு சுமார் 10-க்கல அரிசி நைவேதனமாகிறது. வர்க்கான்னங்களும், பக்ஷணவகைகளும், கறி, குழம்புகளும், நைவேதனமுண்டு. வீரபத்திரக் கடவுளுக்கு வடமாலையிற் பிரியமதிகம். உப்பில்லா வடைகளே சாத்தப்படும். குருந்தமூலருக்கு உப்பில்லா நெய்வடமாலை சாத்துவதுண்டு. தொண்டமானரவர்கள் கட்டளைதவிற பாக்கியெல்லாம் ஸாமான் திட்டங்களே. அம்பிகை ஸந்நிதியில் தீர்த்தப்பிரஸாதம் இவ்வாலயத்திலுண்டு.

உத்ஸவம் ஸ்ரீ மாணிக்கவாசகருடைய உபதேசம் ஜனனம் இந்த நக்ஷத்திரங்களைக் கடைசி நாட்களாகவைத்து முறையே ஆனி, மார்கழி இந்த இரண்டு மாதங்களிலும் பத்துப்பத்து தினங்கள் உஸ்ஸவங்கள் ஸ்ரீ மாணிக்கவாசகருக்கு நடைபெறுகின்றன. பூர்வதினம் அநுக்ஞை விக்னேசுவர பூஜை நடத்தியபிறகு.

1-ம் திருநாள் காலை மஹாத்வஜா ரோகணமும்,
இரவு சிவிகாரோகணமும்,
2-ம் ,, காலை சூரியவாகனமும்,
இரவு சந்திரவாகனமும்,
3-ம் ,, காலை கேடகமும்,
இரவு பூதவாகனமும்,
(புதுக்கோட்டை இராஜாங்கத்தார் மண்டகப்படி)
4-ம் ,, காலை கோரதமும்,
இரவு கைலாஸவாகனமும்.
5-ம் ,, காலை சிவிகாரோகணமும்.
இரவுவெள்ளிப்பல்லக்குசேவையும்
6-ம் ,, காலை வெள்ளி ஸிம்மாஸனமும்,
இரவு யானைவாகனமும்.
7-ம் ,, காலை ருத்திராக்ஷ விமானமும்,
இரவு ரிஷபவாகனக்காக்ஷியும்.
8-ம் ,, காலை வெள்ளி ஸிம்மாஸனமும்,
மாலை ஆனிஉஸ்ஸவத்தில் திருவாச
கபடனமும்,
இரவு குதிரைவாகனமும்.
(ஸேதுபதியாரவர்கள் மண்டகப்படி)
9-ம் ,, காலை மகாரதத்திருவிழாவும்,
இரவு தேரடிப்பார்த்தலும்.
10-ம் ,, காலை வெள்ளிஸிம்மாஸனமும் பஞ்
சப்பிராகாரசேவையும்,
மாலை மார்கழி உஸ்ஸவத்தில் திரு
வாசக படனமும்,
இரவு வெள்ளிரதக்காட்சியும்,

அன்றிரவே அதாவது 11ம் நாள் உதையாத் பூர்வப் உபதேசக்காக்ஷியும் வழக்கமாய் நடந்து வருகின்றன.

வாகனங்களெல்லாம் அழகான வெள்ளிவாகனங்களே. கட்டளைக்காரர்கள் மண்டகப்படிகளும் கோயிலார் மண்டகப்படிகளும் நடைபெருகின்றன. உஸ்ஸவம் சிறப்பாய் நடக்கும். காலத்தில் ஸ்வாமி எழுந்தருளியாகும். மூர்த்தி விலையுயர்ந்த ஆபரணங்களால் அழகாய் அலங்கரிக்கப்பட்டு பார்ப்பவர்கள் மனதையும் நோக்கையும் அபகரிக்கும்.

ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்திக்கு ஸ்கந்தஷஷ்டி உத்ஸவம் நடைபெற்று வருவதோடு கிருத்திகை புஷ்யம் முதலிய விசேஷ காலங்களிலும் அவர் எழுந்தருளுவார்.

ஆவணி மூலத்தன்றும் மற்றும் விசேஷகாலங்களிலும் அதகதற்குத்தகுந்த விமரிசைகள் நடைபெறும்.

வடக்கூர் ஸ்ரீ கைலாஸநாதர் ஆலயம்.

இக்கைலாஸநாதரைப்பற்றி முன்பே சொல்லப்பட்டிருக்கிறது இங்கும் சரிவர பூஜை நைவேதனங்கள் நடந்துவருகின்றன. இங்கு ஆகமபூஜையே. பிரதோஷ காலத்திலும், சிலவிசேஷ காலங்களிலும் மூர்த்திகள் எழுந்தருளியாகும்.

சிலாசாஸனம்.

இவ்வாலயத்தில் அர்த்த மண்டபத்தில் தென்பக்கமுள்ள இரண்டு தூண்களில் கிழக்கேயுள்ளதூணில் அடியிற்கண்டஎழுத்துக்கள் காணப்படுகின்றன.

"ஸ்வஸ்தி ஸ்ரீ கல (உடைந்து போயிற்று) திருப்பெரு (உடைந்துபோயிற்று) துறையாங்பவித்ரமாணிக்கசதுர்வேதமங்கலத்து ஸ்ரீகபிலாஸங்குவலய சந்திர ஈசுவரியமுடைய நாயனர் கோயிலில் ......யிங்நாயநா தேவதான மாயயிறையிவத்து வருகிற கருங்காட்... நாராயணமங்கலம், திருபுவன வீரதேவர்கு யாண்டு முப்பத்து நாலாவது முதல்யின்னுயநார்க்கு நாட்டெல்லை முன்புயில்லாமையால் ...யிவ்வாண்டுமுதல்... கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க..."

இச்சாஸனத்தில் கண்ட திருபுவன வீரதேவன், மூன்றும் குலோத்துங்கன், வீராஜேந்திரன் என்று வேறு பெயர்களுமுடையவனுய் இராஜிராஜனுக்குப்பின்னும் தன் மூன்றும் மகனை இராஜராஜனுக்கு முன்னும் கி. பி. 1178 முதல் 1216வரை சோழச்சக்கரவர்த்தியாக இருந்தவனெனத்தெரிகிறது.

வடக்கூர் ஆதிகேசவப் பெருமாள் ஆலயம்.

இப்பெருமாள் கோயில் நாராயண தீர்த்தத்திற்கு வடக்கிலுள்ளதென முன்பே சொல்லப்

பட்டிருக்கிறது. இவருக்கு பூஜை நைவேத்தனம் நடந்துவருகிறது.

இவ்வாலயத்தில் கண்ட சாஸனம்.

இக்கோயில் மதிள் வெளிப்புறத்தில் மேற்குப்பாகத்தில் அடியிற் துவக்கி தெற்கு மதிளிலும் அடியிற்கண்ட சாஸனம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

" சகாப்தம் 1308 மேல்செல்லாநின்ற ஸ்ரீ வீஹுருப்பண உடையற்கு செல்லாநின்ற அக்ஷய ஸம்வத்ஸரத்து கும்பஞாயற்று பூர்வபக்ஷத் திதியைம் வியாழக்கிழமையும் பெற்ற ரேவதிநாள் மிழலைக்கூற்றத்து நடுவில்கூற்றுபிரும்ம தேசம், தனியூர், திருப்பெருந்துறையாந், பவித்ரமாணிக்க, சதுர்வேத மங்கலத்து ஸபையாரோம்....இது க்கு நியமித்த எழுதியமமுத்துநாயினார் சோழு பாண்டிய விண்ணகாரம்பெருமானுர்க்கு திருநாமத்துக்காணி சந்திராத்தவா (தெரியவில்லை) மாக்கல் வெட்டித்த னிலமாவது வெனத்ரா நாடசெ சாலிப்யேரியில் உத்தம கோமன்மடையால் சோழபாண்டியன் வாய்க்காலில் தெற்கோடிய வாய்க்கால் (தெரியவில்லை) க்கு பாயும் பெற்றுவயக்கல் நாற்றங்காற்றடி முற்றும் வடக்கில் மடையில் நரிபண் வாய்க்காலால் நீர்பாயும் திருச்சிற்றம்பல வயக்கல் தடி முற்றும் ஆகத்தடி இரண்டும் வடக்கிலூ (தெரியவில்லை) சுப்பிரமண்யா (தெரியவில்லை) பெருமாள்கோட்டத்துக்கு வடக்கு (உதிர்ந்தும்

தெரியவுமில்லை) கல்வெட்டிக்கொடுத்தோம் ஸபை யாரோம் ஸபையார் அருளிச்செயற்படிக்கு ஸபைக்கணக்கு மாசிலாமணி..."

இச்சாஸனம் கி. பி. 1379 முதல் 1400வரை விஜயநகரத்தில் அரசாண்ட இரண்டாம் விருபண்ண உடையாரெனப்படும் முதல் விருபாக்ஷ மகாராஜா அவர்கள் காலத்தில் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இச்சாஸனத்திற்கண்ட பெற்றுவயக்கல் பெயருள்ளவும் திருச்சிற்றம்பல வயக்கல் பெயருள்ளவுமானபல நிலங்கள் இப்பெயர்களுடனேயே இவ்வாலயத்திற்கு வடக்கிலும் மேற்கிலும் இப்பொழுதும் சாகுபடியாகி வருகின்றன.

4. தேவஸ்தான ஐவேஜி விவரம்.

புரூரவன் முதலிய அரசர்களும் சோழ பாண்டிய அரசர்களும் பல பொருள்களையும் ஸ்ரீ ஆத்மநாதக் கடவுளுக்கு ஆதியில் ஸர்வமானியமாகக் கொடுத்திருக்கிறார்களெனத் தெரிவதோடு பின்னும் இவ்வாலயக்கல்வெட்டுகளாலும் தாமிர சாசனங்களாலும், சிகாக்களாலும், மற்றுமுள்ள தஸ்தாவேஜிகளாலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே விஜய நகரம் அரசர்கள், தஞ்சையில் அரசர்களாக விருந்த எகோஜி முதலிய மகாராட்டிர அரசர்கள், மதுரையில் அரசு புரிந்த நாயக்க

அரசர்கள், புதுக்கோட்டை இராஜாங்கத்தார் சேதுபதி, பாலையவனம், சிங்கவனம், முதலிய பல ஜமீந்தார்கள் அரந்தாங்கியில் சிற்றரசர்களாக விருந்தவர்கள், பலசில்லரைப்பேர்கள் முதலியவர்களால் ஏராளமான பூமிகளும், பொருளும் கொடுத்திருப்பதாக அறிகிறோம்.

இவ்வாலயக் கல்வெட்டுகளில் சுமார் 300 வருஷங்களுக்குமுன் சாலிவாகனம் 1500க்கு ஸமீப காலத்தில் ஏராளமான கிராமங்கள் பலர்களால் விடப்பட்டிருப்பதாகத்தெரிகிறது.

தஞ்சை ஏகோஜிமகாராஜா அவர்கள் சுமார் 250வருஷகாலத்துக்குமுன் சிகாஸனது மூலமாய் இனுமாயும் ஸர்வமான்யமாயும் பலகிராமங்களையும் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார். இந்த சிகாக்களில் பூர்வாபூர்வம் நடந்துபடியே நடத்திவருகிறதென்று சொல்லப்படுவதோடு தர்மம் என்றென்றைக்கும் சாசுவதமாய் நடத்தப்படவேண்டுமென்றும் சரியாய் நடத்தியவர்கள் நல்லகதியையும் அகிதம் செய்தோர் மிகுந்தபாபத்தையுமடைவார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. கிராமங்களை ஏகபோகமாய் ஸர்வசுதந்தரத்தோடு அவைகளிலுள்ள ஸகல நிதிகளோடும் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இதைப்போலவேயே பலர்களும் கொடுத்திருப்பதாக அரிகிறோம்.

சிகாஸனதுபட்டயம் இவைகளின்படி சுமார் 60கிராமங்கள்வரையில் முன்னிருந்தவைகளை ஸ்தி

ரம் செய்திருப்பதாகத்தெரிகிறது. நமது காருண்ய இங்கிலீஷ் ராஜாங்கத்தார் மேற்கண்ட இனங்களை ஸ்திரப்படுத்தியிருக்கிறார்கள்.

மேற்படி கிராமங்கள் பெரும்பாலும் தஞ்சை ஜில்லாவில் பட்டுக்கோட்டை, அரந்தாங்கித்தாலூகாக்களிலும், சிறிது திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டணம் தாலூகாக்களிலும் இருக்கின்றன.

1803ம் வருஷம் ஸமீபத்தில் கீழாநிலையைச் சார்ந்த இடங்களை புதுக்கோட்டை ஸமஸ்தானத்தாருக்கு இங்கிலீஷ் இராஜாங்கத்தார் விட்டபொழுது அத்துடன் சேர்ந்துபோன சுமார் 10கிராமங்கள் வரையில் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலிருக்கின்றன.

இராமநாதபுரம் ஜில்லாவில் சேதுபதியவர்களாலும் சிவகங்கை ஜமீன்தாரவர்களாலும் ஆதிகாலத்தில் அவர்கள் கட்டளைக்காக விட்டகிராமங்கள் சில விருக்கின்றன.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலும் தஞ்சை ஜில்லாவிலேயே அரந்தாங்கித்தாலூகாவிலும் புதுக்கோட்டைத்தொண்டமான் மகாராஜா அவர்களால் அவர்கள் கட்டளைக்காக ஆதிகாலத்தில் விட்ட கிராமங்கள் சிலவிருக்கின்றன.

இவ்வாலயத்தைச்சில நூற்றாண்டுகளாய் பரிபாலித்துவரும் திருவாவடுதுறை ஆதீனத்தார் காலத்தில் வரும்படியைக்கொண்டு அப்போதப்

போது அநேக வருஷங்களுக்கு முன்முதல் கிறயத்திற்கு வாங்கப்பட்ட கிராமங்கள் பலவுள.

மேற்சொல்லிய பலவிதங்களிலும் இப்பொழுது சுமார் 100கிராமங்கள்வரையில் இருப்பதாகத்தெரிகிறது.

மேற்சொல்லிய கிராமங்களிற் பெரும்பாலும் ஸ்ரீ ஆத்மநாத சுவாமிக்கு இருவாரஸொந்தமான கிராமங்களாகவே தெரிகிறது.

வாகனங்களெல்லாம் வெள்ளி வாகனங்களென்றும் விலையுயர்ந்த பல ஆபரணங்களுமிருக்கின்றனவென்றும் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்சொல்லிய மதுரையில் அரசுபுரிந்த நாயக்க அரசர்களில் ஒருவரால் முத்துக்குளித்தல் சுதந்தரமும் இவ்வாலயத்துக்குக்கொடுக்கப்பட்டு முத்துக்குளித்து வந்திருப்பதாகவும் தெரிகிறது.

இது ஸம்மந்தமான தாமிரசாஸனத்திலடங்கியது படிக்கத்தக்கது அது பின்வருமாறு;

"ஸ்வஸ்தி ஸ்ரீ சாலீவாகன சகாப்தம் 1461 ஆண்டு விளம்பி நாமஸம்வத்ஸரத்தில் உத்தராயணத்தில் சசிருதுவிலமாக மாஸம் 14உ கிருஷ்ண பக்ஷத்தில் சுக்ரவாரமும் திரயோதசியும் சதய நக்ஷத்திரமும் திருவநாமயோகமும் நாறவாகரணமும் பெத்த மகாசிவராத்திரி புண்யகாலத்தில் பாண்டிமண்டலம் தக்ஷிண சிம்மாஸநாதிபதி... செங்கோலரசு செலுத்தி அருளும் துரை ஆதிக்க

முடைய மகா மண்டலேசுவரமான பாசைக்கும் தப்புவாராத கண்டன் மூவாயிரகண்டன் கண்ட நாடுகொண்டு கொண்டநாடு குடாதான் பாண்டி மண்டல பரமேசுவரன் சோளமண்டலமிருபத்து நாற்காதமுடைய மன்னரைமடக்கி... அரசுகொ டுத்து தெறைகொள்ளும் பத்மநாபமுத்து சிலாப முடைய பெருமான் பொதியமாமலை பாராசாச முனி மதுரை துரைத்தனம... செங்கோலுடன் செலுத்தியருளும்சுவாமியாரவர்களான ஸ்ரீ விஜய குமார முத்துரெங்க சொக்கலிங்கதிருமலை நாயக்கர் சுவாமியாரவர்கள் திருக்கருணைபுரிந்து ச்லவதநதீ தக்ஷணதீரமாகிய பாண்டிநாட்டிலே மிழலைக்கூத் தத்தில் நடுவில் கூத்தம் தனியூர் பிரும்மதேசம் பவித்ரமாணிக்க சதுர்வேத மங்கலபுரம் ஆதிகை லாஸ சிவபுரக்ஷேத்ரமாகிய திருப்பெருந்துறை யில் விளங்காநின்ற பிருமம விஷ்ணு ருத்ர மகேசு வர சதாசிவ பிந்துநாத பராசக்திக்கு மேலாகிய பராபர நிராமய நிற்குண நிராலம்ப நிரதிசய அக ண்டாகார ஸச்சிதாநந்த சொரூபஸொப்பிரகாச வஸ்துவாகிய ஸ்ரீ ஆத்மநாத சுவாமியார் சன்னி தானத்துக்கு நாம் நிந்தமாக தானம்பண்ணிக்குடுத் தது மன்னார்முத்து சிலாபத்தில் ஒருதோணியும் அஞ்சுகல்லும் தூத்துக்குடி முத்துச்சிலாபத்தில் ஒருதோணியும் அஞ்சுகல்லும் செறுவமானனிய மாக மாசிமாஸம்சதுர்தசியில் மகாசிவாரத்ரி அண் றைகாலத்தில் மீனாக்ஷிசுந்தரேச்வர சுவாமி சந்நிதி யில் ஸ்வர்ண புஷ்கரணி தீர்த்தக்கரையில் தாரபூர் வமாக தாம்பிரசாசந பட்டயம் பண்ணிக்குடுத்த

படியினுலே ஆதித்த சந்திராளுள்ளவரைக்கும் ஆண்டு அனுபவித்துக்கொள்ளுவார்களாகவும்..."

5. தேவஸ்தான பரிபாலனம்.

தஞ்சை ஜில்லாவில் திருவாவடுதுறை ஸ்ரீ பஞ்சாட்சர தேசிகரவர்கள் ஆதீனம், மிக்கப்பழமையானதென்பதும், தமிழுக்கு இருப்பிடமென்பதும், பெரிய வித்வான்களான ஆதீனகருத்தர்கள் பலர்களால் அலங்கரிக்கப்பட்டு ஸகல ஸம்பத்தோடும் விளங்கும் முக்கிய இடமென்பதும், வித்வான்களை அன்போடு ஆதரித்தும், பல தேவஸ்தானங்களினுடையவும் அதிகாரத்தையும் தன்னிடத்து வகித்துச்செவ்வையாய் பரிபாலித்துவரும் மடமென்பதும் யாவருக்குந்தெரிந்ததே.

திருவாவடுதுறை ஆதீனக்கர்த்தரவர்களாகிய பண்டாரஸன்னிதியவர்களின் ஆஞ்ஞைக்கு இத்தேவஸ்தானம் உட்பட்டது. ஸ்ரீ ஆத்மநாதக்கடவுளின் டிரஸ்டியாக மேற்படி பண்டாரஸன்னிதி அவர்களிருந்து கட்டளைத்தம்பிரான்களை அனுப்பியும் காரியஸ்தர்கள் மூலமாயும் காரியங்களைப் பார்த்துவரும்படி செய்து தானும் மேல்பார்த்துவருகிறார்கள். இவ்வாளுடையார் கோவிலிலும் இதைச்சுற்றிலுமுள்ள அநேகர்கள் தாங்கள்செய்திருக்கும் சிலதர்மங்களைக்கூட என்றென்றைக்கும் அவைகள் ஸரியாய் நடக்கவேண்டியதை உத்தேசித்து இவர்கள் வசம் ஒப்புவித்திருக்கிறார்கள்.

முன்சொல்லியபடி இவர்கள்காலத்தில் வருமானத்தைக்கொண்டே தேவஸ்தானத்துக்குப்பல கிராமங்கள் வாங்கியும் திருப்பணிவகையரு நடத்தியும் விருத்தி செய்திருக்கிறுர்களென்றுல் பரிபாலனம் மிக்க நலமாய் நடந்துவருகிறதென்பது தெளிவு.

தற்காலத்துப் பண்டாரஸன்னிதியாயிருப்பவர்கள் மேன்மைக்குணத்துடன் ஏழைகளேயும் வித்வான்களேயும் ஆதரிப்பவரும் சிவபக்த சிரோண்மணியுமான ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்கப்பண்டாரஸன்னிதியவர்களே.

சுலோகம்.

"யோவேதாந்த விசிந்த்ய ரூபமஹிமா
1
யம்யாதி ஸர்வம் ஜகத்
யேநேதம் புவனம் பிருதம் விதிமுகா:
2 3 4 5 6
குர்வந்தியஸ்மைநம:
யஸ்மாத்ஸம் ப்ரபவந்தி பூதநிகரா:
7 8
யஸ்யஸ்மிருதிர் மோக்ஷக்ருத்
யஸ்மின் யோகரதி: சிவேதி, ஸமஹாந்
9
ஆத்மேச்வர: பாதுந:"

1, 3வது த	4, 4வது ப	7, 4வது ப
2, 3வது த	5, 4வது த	8, 4வது ப
3, 4வது ப	6. 2வது க	9, 3வது க

விருத்தம்.

"வருந்திவிழிப் புனல்சொரிந்து மணித்திருவா
சகம்பகர்ந்து மலரடிக்குத்
திருந்துபணித் தொழிலபுரியச் சிவநெறியோ
டுதித்ததிரு வாதவூ
ரருந்தனக்கு வையுங்கவர்ந்து ளகங்கவர்ந்து
தன்வயத்த னாக்கவேண்டிக்
குருந்தின்மூலத் தெழுந்தசிவக் கொழுந்தையுளத்
தோர்ந்துகளி கூர்ந்துவாழ்வாம்."

முற்றிற்று.

முக்கியப்பிழை திருத்தம்.

Q23:38·21192D
N35

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
முகவுரை	12	ஆத்மநாத	பிரும்மஸ்ரீ ஆத்மநாத
8	16	சன்னவன	ச்சன்னவன
21	2	விழுசி	விஷூசி
31	22	யோக	யோகத்தில்
32	11	பாதுப்பதற்காக	பாதுகாப்பதற்காக
52	15	தோரேடு	தேரோடு
54	4	நாருயண	நாராயண
55	6	கீழ்புரம்	கீழ்புறம்
57	5	மன்டப	மண்டப
62	2	வடமேல்புறம்	வடபுறம்
65	26	மகாலிங்	மகாலிங்க
66	8	வேளி	வெளி
67	21	வேற்கண்ட	மேற்கண்ட
71	20	தென்புரம்	தென்புறம்.

சென்னை-600 008.
1700639

ஸ்ரீ காடியம்மன் பிரஸ், பட்டுக்கோட்டை.